PUBLIC LIBRARY
JAFFNA.

ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தர்

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

186




## ரோம-டச்சு சட்டம்

ஒல்லாந்தர்களின் சட்டதிட்டங்களைவிட, இந்நாட்டில் இருந்த சட்டதிட்டங்களில் பெரும் குறைபாடுகள் இருந்தன. அத்தோடு, இந்நாட்டுச் சட்டங்கள் மிகவும் கொடூரமானதாகவும் இருந்தன. அதனால், அவர்களின் ஆட்சி அதிகாரமுள்ள பிரதேசங்களில் பழைய சட்டங்களை நீக்கிவிட்டு ஒல்லாந்த சட்டங்களை அமுல்படுத்தினர். அது 'ரோமன்-டச்சு சட்டம்' என அழைக்கப்பட்டது. இவ்வாறு ரோமன்-டச்சு சட்டம் படிப்படியாக நாடு பூராகவும் பரவியது. இன்றும் எமது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுவரும் பொதுச் சட்டங்களில் பெரும்பாலானவை ரோமன்-டச்சு சட்டங்களே ஆகும்.

போர்த்துக்கேயரைப் போலல்லாது; ஒல்லாந்தரிடம் ஒழுங்கு முறைகள் இருந்தன. அதுமட்டுமல்ல; அவர்கள் இந்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் ஆலோசனைகளையும் புறக்கணித்து அதற்கெதிராகச் செயல்பட விரும்பவில்லை. அத்தோடு, ஒல்லாந்த அதிகாரிகளில் பெரும்பாலானோர் வர்த்தகர்களாக இருந்தமையால் போர்த்துக்கேய (படையினரை விட) போர்வீரர்களைவிட, சிறந்த மக்கள் மனதறிந்த நிர்வாக முறைகளை அறிந்து வைத்திருந்தனர். ஒல்லாந்தர் இந்நாட்டு மக்களின் சட்டதிட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் அறிந்துகொள்ளப் பெரிதும் முயற்சி செய்தனர்.

திருமணம், உரிமை, கடன், உள்ளிட்ட பல விடயங்கள் குறித்த சட்டதிட்டங்களும் பழக்க வழக்கங்களும் மரபுகளும் சிங்களப் பிரதேசங்களைவிட, மிகத் தெளிவாகவும் சிறப்பாகவும் வடக்கே யாழ்ப்பாணத்தில் இருந்தன. அப்பிரதேசங்களில் ஒல்லாந்தர் 'தேசவழமை' எனும் யாழ்ப்பாண பாரம்பரியங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் ஏற்ப சட்டதிட்டங்களை அமைத்து அதன்படி, நிர்வாகத்தை நடத்தினர். சிங்களப் பிரதேசங்களில் அவர்கள் சிங்கள சட்டதிட்டங்களை சிங்கள அதிகாரிகளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டனர். அதன்படி, வழக்குகளுக்குத் தீர்ப்பும் வழங்கினர். ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் அடிப்படை நோக்கம் அதிக லாபம் ஈட்டுவதாகவே இருந்தது. அதனால், சங்கத்தின் வருமான வழிகளை கண்டிப்பாக பரிசீலனை செய்ய வேண்டும் என தீர்மானித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசியாவின் அதிசிறந்த பல்கலைக்கழக தரப்படுத்தலில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள்

தெற்காசியாவின் அதிசிறந்த நூறு பல்கலைக்கழகங்களைத் தரப்படுத்தும் சர்வதேச செயற்றிட்டத்தின்கீழ், இலங்கையிலுள்ள ஆறு பல்கலைக்கழகங்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பு, பேராதனை, ஸ்ரீ ஜயவர்தனபுர, யாழ்ப்பாணம், ரஜரட்டை, திறந்த பல்கலைக்கழகம் ஆகிய ஆறு பல்கலைக்கழகங்களுமே இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. மேற்படி தரப்படுத்தல் பட்டியலில் கொழும்புப் பல்கலைக்கழகம் எட்டாவது இடத்தை வகிப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.




## டெங்கினால் இதுவரை 7,673 பேர் பாதிப்பு

### 29 பேர் உயிரிழப்பு

இவ்வருடத்தின் ஜனவரி மாதத்திலிருந்து இதுவரையான காலப்பகுதிவரை டெங்குக் காய்ச்சலினால் நாடளாவிய ரீதியில் 7,673 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 29 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே இதன் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதோடு, ஏனைய மாவட்டங்களில் டெங்குக் காய்ச்சலினால்



பாதிக்கப்டுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆகவே, டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக, சுற்றுப்புறச் சூழலை நுளம்புகள் பெருகாதவாறு சுத்தமாக வைத்திருக்கும்படி சுகாதார அமைச்சு பொதுமக்களைக் கோரியுள்ளது.

# 1,000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் பிறமொழிகளையும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு

## கல்வித்துறை அமைச்சர் தெரிவிப்பு

மாணவர்கள் தாய்மொழியைத் தவிர, பிறமொழிகளையும் கற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை 1,000 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின்கீழ் மேற்கொள்ளவுள்ளதாக கல்வித்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு சாஹிரா கல்லூரியில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றும்போது;

ஆங்கிலம் மற்றும் பிறமொழிகள் உட்பட, தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம், கணிதம், விளையாட்டு, சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களும் இச் செயற்றிட்டத்தில் உள்ளடங்குவதாகவும் இவற்றைக்



கற்பிப்பதற்காக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நியமனங்களை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த 1,000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்திற்கமைய, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் குறைந்தது மூன்று பாடசாலைகள் சகல வசதிகளையும் கொண்டதாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விஜய்
Vijey

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# அரசாங்கப் பாடசாலைகளில் 8,787 அதிபர் வெற்றிடங்கள்

அரசாங்கப் பாடசாலைகளில் 8,787 அதிபர் வெற்றிடங்கள் நிலவுவதாக கல்வித்துறை பிரதி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறமையானவர்களைத் தெரிவுசெய்வதற்கு உரிய




நடவடிக்கைகளை எடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதளவில் 2,767 பதில் அதிபர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் பாடசாலை அதிபர்கள் ஓய்வுபெற்றுச் செல்லும்போது, அந்தப் பாடசாலைகளை நிர்வகிக்கக்கூடிய திறமையுள்ளவர்களிடம் அவர்கள் தமது பணியை ஒப்படைத்துச் சென்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, பல வருடங்களாக பதில் அதிபர்களாக இருந்து மேற்கொண்டு வந்த சேவையையும் திறமையையும் கருத்தில்கொண்டு அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது நியாயமானது என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், பதில் அதிபர்களைப் போன்றே, போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நீதிமன்றத் தீர்ப்புக்கமைய நியமனங்களைப் பெறவுள்ளவர்களையும் அதிபர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளதாகவும் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை எனவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உ/தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் மார்ச் 30 வரை ஏற்றுக்கொள்ளப்படும்

இவ்வாண்டுக்கான (2012) க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான



விண்ணப்பப்படிவங்கள் இம்மாதம் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்களூடாகவும் தனியார் விண்ணப்பதாரிகள் தபால்மூலமாகவும் விண்ணப்பப்படிவங்களை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே.புஷ்ப குமார தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டுக்கான க.பொ.த. உயர் தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாசகர் முகம்

'விஜய்'
முன் அட்டையில்
இந்த வாரம்
இடம்பெற்றிருப்பவர்
ஞா.கேமிதா கிறிஸ்மந்தி,
நீர்கொழும்பு.



## உலக நீர் தினத்தையொட்டி நாடளாவிய கட்டுரைப் போட்டி

### தலைப்பு: நீரை சேமிப்பதே எனது அபிலாஷை

சொற்களின் எண்ணிக்கை: 200-250 சொற்கள்
வயது எல்லை: 5 வயது முதல் 15 வயது வரை
கட்டுரைகளை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள்: 2012 மார்ச் 31

அனுப்ப வேண்டிய முகவரி:

உலக நீர் தின
கட்டுரைப் போட்டி,
'விஜய்'
த.பெ.இல: 2037
கொழும்பு.

**பரிசுகள்:**

- முதலாமிடத்தைப் பெறும் மாணவனின் அல்லது மாணவியின் பெயரில் அவரது பாடசாலைக்கு மைக்ரோ நீர் தொடர்பான திட்டம் ஒன்று
- முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவனின் அல்லது மாணவியின் பெயரில் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கக்கூடிய திட்டம் ஒன்று அவரது பாடசாலையில் முன்னெடுக்கப்படும்.

brandix inspired solutions விஜய்


- ஒன்றிணைந்த வேலைத்திட்டமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தரது வதந்தியால் பிறந்த தொலைநோக்கி

இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1587-1619 இல் இன்று நெதர்லாந்து எனப்படும் ஒல்லாந்தில் கண்ணாடி (மூக்குக் கண்ணாடி) செய்யும் ஹென்ஸ் லிப்பர்ஷே (Hans Lippershey) என்பவர் வாழ்ந்து வந்தார். இவரது முழுப்பெயர் ஜொஹன்னஸ் லிப்பர்ஷே என்பதாகும். கிட்டப் பார்வை குறைவானவர்கள் தங்களது பார்வையை அதிகமாக்கிக் கொள்வதற்காக, அவரால் தயாரிக்கப்பட்ட மூக்குக் கண்ணாடியை உபயோகித்தனர். ஒருநாள் இவரிடம் வேலை பழகும் பிள்ளைகள் இருவர் வில்லைகளைச் செய்து கொண்டிருக்கும்போது, தற்செயலாக ஒரு வில்லைக்கு முன்னால் இன்னொரு வில்லையை வைத்துப் பார்க்க நேர்ந்தது. அதனூடாகத் தூரத்திலுள்ளவை அருகில் உள்ளவை போலத் தெரிவதை அவர்கள் கண்டனர். இதுபற்றி அவர்கள் லிப்பர்ஷேயிடம் கூறியபோது, அவர் அந்த இரு வில்லைகளையும் குழாய்கள் இரண்டில் பொருத்தி, அதனை இணைத்து முதலாவது தொலைநோக்கியை உருவாக்கினார். தூரத்திலுள்ள பொருட்களைப் பார்க்கக்கூடிய அந்த உபகரணத்தை அவர், ஒல்லாந்த அரசுக்கு விற்பனை செய்ய எண்ணினார். (அக்காலத்தில் அது தொலைநோக்கி என அழைக்கப்படவில்லை) ஒல்லாந்த அரசும் அதனை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்தது. யுத்த செயற்பாடுகளுக்கு இந்த உபகரணத்தினால் பெறப்படும் பயனை உணர்ந்த ஒல்லாந்த அரசு அதனை யுத்த ரகசியமாகக் கருதி அத்தொழில்நுட்பம் நாட்டிற்கு வெளியே போகவிடாது தடுத்தது.

மேற்கு ஜேர்மனியில் வெசல் என்ற இடத்தில் 1570 ஆம் ஆண்டு பிறந்த லிப்பர்ஷே 1594 இல் நெதர்லாந்தின் சீலன்ட் பிராந்தியத்தின் மிட்ல்பர்க் என்ற இடத்தில் குடியேறினார். அவர் அந்த ஆண்டிலேயே, திருமணம் செய்து சீலன்ட் பிரஜையானார். அக்காலத்தில் சிறந்த மூக்குக் கண்ணாடி செய்பவராக



இருந்தவரும் இவரேயாவார். மூக்குக் கண்ணாடிக் கடையொன்றைத் திறந்து அந்த நகரிலேயே வாழ்ந்த அவர், 1619 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மரணமடைந்தார். இவர் தூரத்தில் உள்ளவற்றை அருகில் பார்க்கும் கண்ணாடியின் பொருட்டு Dutch Perspechive Glass உரிமையைக் கோரும் பத்திரமொன்றை 1609 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி நெதர்லாந்து அரசாங்கத்திற்கு முன்வைத்தபோதிலும், அதற்கு சில வாரங்களுக்கு முன்னர் வேறொருவர் (கண்ணாடி செய்பவர்) அக்கருத்தைப் பதிவு செய்திருந்ததால், லிப்பர்ஷேக்கு அது கிடைக்கவில்லை. எனினும், நெதர்லாந்து அரசாங்கம் பரிசு, விருதுகள் என்பனவற்றின்மூலம் அவரைக் கௌரவப்படுத்தியது.

இவ்வாறே, ஒல்லாந்தில் ஒருவர் தொலைநோக்கியைக் கண்டுபிடித்துள்ளார் என்ற கதை பல நாடுகளின் ஊடாக, இத்தாலியிலும் பரவியது. இதனை இத்தாலியில் இருந்த கலிலியோ கலிலி கேள்விப்பட்டார். எனினும், அதனைக்காண சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கவில்லை. இந்தச் செய்தியைக் கேட்ட கலிலியோ தான் செய்த இரு வில்லைகளைக்கொண்டு தொலைநோக்கியை உருவாக்கினார். அவ்வாறு உருவாக்கியது மட்டுமன்றி; அவர் அதனூடாக, விண்ணை நோக்கினார். இதன் மூலம் மனித இனம் காணாத பல அரிய காட்சிகளை அவர் கண்டார். 1609 ஆம் ஆண்டு தொலைநோக்கியைக்கொண்டு ஆகாயத்தை நோக்கியவராக இவரே கருதப்படுகிறார்.

எவ்வாறாயினும் தொலைநோக்கியின் உண்மையான கௌரவத்தைப் பெறுபவர் கலிலியோ கலிலி ஆவார். அவரால் கண்டுபிடிக்கப்பட்ட உபகரணத்திற்கும் அப்பெயர் சூட்டப்பட்டது. 1611 ஆம் ஆண்டு இத்தாலிய விஞ்ஞான அக்கடமி கலிலியோ கலிலிக்கு கௌரவம் செலுத்தும் முகமாக நடாத்திய விழாவில் மற்றுமொரு இத்தாலிய விஞ்ஞானியான ஜியோவன்னி, டெமிசியானி (Giovanni Demisiani) என்பவரால் இப்பெயர் சூட்டப்பட்டது. கிரேக்க மொழியில் வரும் டெலே tele (தூரம்) ஸ்கொபியன் skopein (நோக்கி) எனும் சொற்களை இணைத்து உருவானதே இதுவாகும். கலிலியோவால் அக்கடமிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட உபகரணம் 'டெமிசியானியால்' என்று அழைக்கப்பட்டது. (-அ)

## உலகை மாற்றிய கலிலியோவின் தொலைநோக்கி



Source : The Galileo Project/NASA/IMHS

### 400 வருடங்களுக்கு முன்னரான தொலைநோக்கி



1. 1609 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி எட்டு மடங்காகத் தெரியக்கூடிய தொலைநோக்கியைக் கலிலியோ கலிலி வெனீசியாவின் அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.
2. இருபது மடங்காகத் தெரியக்கூடிய தொலைநோக்கியை உருவாக்கிய போது, அவர் வியாழனின் நான்கு கோள்களை இனங்கண்டார்.
3. இந்தக் கண்டுபிடிப்பின் காரணமாக, கிரேக்க மெய்யியலாளரான அரிஸ்டோட்டல் முன்வைத்திருந்த அனைத்து விண்வெளிப் பொருட்களும் பூமியைச் சுற்றிவருகின்றன என்ற கோட்பாடு தவறானது என உறுதிப்படுத்தப்பட்டது.
4. தனது கண்டுபிடிப்பின்மூலம் அனைத்துக் கோள்களும் சூரியனை மையமாகக்கொண்டு சுழல்கின்றன என்பதனைக் கலிலியோ கலிலி நிரூபித்தார். இதற்கு 60 வருடங்களுக்கு முன்னர் போலந்து இனத்தவரான கொப்பர்னிக்கசால் இது வெளிப்படுத்தப்பட்டது.
5. கத்தோலிக்கத் திருச்சபையின் ஸ்பானிய சமய நீதிமன்றம் இக்கருத்திற்குத் தனது எதிர்ப்பைத் தெரிவித்துக் கலிலியோவைத் தடுப்புக் காவலில் வைத்ததுடன், அவரது கருத்தினை மாற்றும்படி வற்புறுத்தியது. எனினும், பிற்காலத்தில் இது தொடர்பாகக் கலிலியோவிடம் மன்னிப்பு வேண்டியது.
6. 1687 ஆம் ஆண்டு ஐசாக் நியூட்டன் புவியீர்ப்பினைக் கண்டுபிடித்த பின்னர் கோள்கள் பற்றிய உண்மையான நிலைப்பாடு நிரூபிக்கப்பட்டது.

AFP

# மாயன் நாகரிகம் சுவடே இன்றி அழிந்து போனதெப்படி?






உலகின் மிகத் தொன்மையான 'மாயன் நாகரிகம்' சுவடே இல்லாமல் அழிந்தது எவ்வாறு என்பதை மெக்சிகோ மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இன்றைய மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த மெக்சிகோ, குவாட்டமாலா, ஹொண்டூரஸ் ஆகிய நாடுகளில் கி.மு. 2500 முதல் கி.பி. 950 வரை இந்த மாயன் நாகரிகம் பரவியிருந்தது. வானியல், கணிதம், கட்டடக்கலை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மாயன் நாகரிகம் சிறந்து விளங்கியது. எனினும், இந்த நாகரிகம் கி.பி 950 களில் சுவடே இன்றி அழிந்து போய்விட்டது.

இந்நாகரிகம் அழிந்துபோனமைக்குப் பல காரணங்கள் கூறப்பட்டபோதிலும், கடுமையான பஞ்சம், யுத்தங்கள், ஸ்பெயின் நாட்டவரால் கொண்டு வரப்பட்ட 'அம்மைநோய்' என பல காரணங்கள் குறிப்பிட்டுப் பேசப்படுகின்றன. இந்நிலையில், மெக்சிகோவின் அறிவியல் ஆய்வுக்கான 'யுகடான்' மையம் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த சவுத்ஆம்டன் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் இணைந்து அண்மையில் 'யுகடான் தீபகற்பம்' என அழைக்கப்படும் மெக்சிகோவின் தென் பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்டன.

இப்பகுதி அழிவுற்ற மாயன் நாகரிகத்தின் மையப்பகுதியாகும். இங்கு ஏற்பட்ட மிகக் கொடுமையான பஞ்சம்தான் மாயன் நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு வித்திட்டது என இதுவரை விஞ்ஞானிகள் கூறி வந்தனர். ஆனால், அண்மையில் இப்பகுதியில் கி.பி. 800 முதல் கி.பி. 950 வரையிலான காலகட்டத்தில் நீர்நிலைகளில் நிகழ்ந்த ஆவியாதல் குறித்து கணக்கீடுகள் எடுக்கப்பட்டன. அதன்படி, இப்பகுதியில் ஆண்டுதோறும் பொழியும் மழையின் அளவில் 40 முதல் 25 சதவீதம் மழையின் வளம் குறைந்திருந்தது. அதாவது, மிகச் சிறிய அளவிலான பஞ்சமே மாயன் நாகரிக அழிவிற்குக் காரணம் எனக் கண்டறியப்பட்டது.




இதுகுறித்து, சவுத்ஆம்டன் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர் எல்கோ ரௌலிங் கூறுகையில்; "இப்பகுதியில் உள்ள திறந்தவெளி நீர்நிலைகளில் அதிகளவு ஆவியாதல் நிகழ்ந்ததால், திறந்தவெளி நீர்நிலைகளில் நீர்மட்டம் வெகுவாகக் குறைய ஆரம்பித்தது.இதனால், நீர்ப்பஞ்சம் உருவானது. அதன் விளைவாக, மக்கள் நகரங்களை விட்டு வெளியேற ஆரம்பித்தனர்" என்று கூறுகிறார். அத்துடன், எங்கு அதிகளவில் நீர் ஆவியாதல் நிகழ்கிறதோ அங்கு இதுபோன்ற மிகச்சிறிய அளவிலான பஞ்சங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ஊடக சங்க அங்கத்தவர்களின் திறமைகாண் விழா
# மத்திய மாகாண 'மஹரத்மல' பாடசாலை ஊடக விருது விழா 2012

## விண்ணப்ப முடிவு திகதி மார்ச் 31

மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற 'மஹரத்மல பாடசாலை ஊடக விருது விழா' இரண்டாவது தடவையாக இம்முறை நடாத்துவதற்கு மத்திய மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. மாகாணக் கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற இவ்வாண்டிற்கான விருது விழாவுக்காக, கண்டி பிளேன் ஸ்ரீ லங்கா அமைப்பின் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் பங்கேற்றல் வேலைத்திட்டத்தினால் நிதியுதவி மற்றும் தொழில்நுட்ப வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், தேசிய கல்வி நிறுவகத்தின் ஊடகக் கல்வி செயற்றிட்டமானது, இதற்கான திட்டமிடல் மற்றும் ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. அத்துடன் , விஜய் மற்றும் விஜய பத்திரிகைகள் கல்வி வழிகாட்டல்களையும் ஊடகப் பங்களிப்பையும் வழங்குகின்றன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய, போட்டிகளில் பங்குபற்றலாம்.

**அடிப்படை விபரங்களும் பொது நிபந்தனைகளும் மாணவர்கள்/ஆசிரியர்களுக்கான போட்டிகள் (சிங்களம், தமிழ் மொழிமூலங்கள்)**

1. எல்லாப் போட்டிகளுக்குமான பொதுத் தலைப்பு: 'சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் பங்கேற்றல்' என்பதாகும்.
2. மத்திய மாகாண பாடசாலைகளில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களும் அப்பாடசாலைகளில் சேவை புரியும் ஆசிரியர்களுமே இப்போட்டிகளில் பங்குபற்றலாம். (பாடசாலை எனும்போது, அரசாங்கப் பாடசாலைகள், அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் என்பன அடங்கும்)
3. சகல போட்டியாளர்களும் தத்தமது பாடசாலை ஊடக சங்கத்துக்குப் பொறுப்பான ஆசிரியரின் சிபார்சுடனும் அதிபரின் அனுமதியுடனுமே தங்கள் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பி வைக்க வேண்டும். ஏதேனுமொரு பாடசாலையில் ஊடக சங்கம் இல்லாதிருப்பின், அதனை அமைத்துக்கொண்டதன் பின்னர் போட்டியில் கலந்துகொள்ளலாம்.
4. மாணவர்களுக்கான போட்டிகள் இரு பிரிவுகளின்கீழ் இடம்பெறும்.
   1) **கனிஷ்ட பிரிவு:** தரம் 6- தரம் 9 வரை
   2) **சிரேஷ்ட பிரிவு:** தரம் 10- தரம் 13 வரை
5. ஆசிரியர்களுக்கான போட்டிகள் திறந்த போட்டியாக மாத்திரமே இடம்பெறும்.
6. போட்டி விபரங்களுக்கமைய, தனிநபர்/ குழுநிலை/ இருபாலாரையும் உள்ளடக்கிய குழுநிலை என்ற ரீதியில் போட்டிகளில் பங்கேற்கலாம்.
7. சகல போட்டிகளும் மூன்று மட்டங்களில் நடைபெறும்.


**1) பாடசாலை மட்டப் போட்டிகள்:** (போட்டிகளை நடாத்தி முதலாம் இடத்தைப் பெறும் வெற்றியாளர்களின் பெயர்ப் பட்டியல் வலயப் போட்டிகளுக்காக அனுப்பப்படல் வேண்டும். இது அதிபரின் ஆலோசனைக்கமைய, பாடசாலை ஊடக சங்கப் பொறுப்பாசிரியரால் நிறைவேற்றப்படல் வேண்டும்)

**2) வலய மட்டப் போட்டிகள்:** (பாடசாலையிலிருந்து கிடைக்கும் முதலாமிடத்தைப் பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலுக்கமைய, வலய மட்டப் போட்டிகளை நடாத்தி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் வெற்றியாளர்களின் விபரங்களை மாகாண மட்டப் போட்டிகளுக்காக அனுப்பிவைக்க வேண்டும். வலயமட்டப் போட்டிகள் வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய, முறைசாராக் கல்வி செயற்றிட்ட அதிகாரியால் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்)

**3) மாகாண மட்டப் போட்டிகள்:** (வலய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களின் பெயர் விபரத்திற்கமைய, மாகாண மட்டப் போட்டிகள் இடம்பெறும். மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவானது, மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய, இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்)

✱ **குறிப்பு:** (ஆசிரியர்களுக்கு மாகாண மட்டத்திலான போட்டிகள் மாத்திரமே இடம்பெறும்.எனவே, ஆசிரிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் இங்கு இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்)

8. வெற்றி பெற்றவர்களின் விபரங்களை சமர்ப்பித்தல்.
   1) பாடசாலை மட்ட விபரங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்
   2) வலய மட்ட விபரங்கள் 2012 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் இங்கு இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
9. இம்முறை 15 போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. அவை பின்வருமாறு:




**தனிநபர் போட்டிகள்:**

01) செய்திப் பத்திரிகைகளுக்கான செய்திக் கட்டுரைப் போட்டி. (சிரேஷ்ட)- மாணவர் (சிங்களம்/ தமிழ்)
02) கவிதைப் போட்டி (கனிஷ்ட/சிரேஷ்ட)- மாணவர்/ ஆசிரியர் (சிங்களம்/தமிழ்)
03) செய்திப் பத்திரிகைகளுக்கான விசேட கட்டுரைப் போட்டி (சிரேஷ்ட)-மாணவர்/ ஆசிரியர் (சிங்களம்/தமிழ்)
04) புகைப்படப் போட்டி (சிரேஷ்ட)-மாணவர்/ஆசிரியர்/ பழைய மாணவர்/பொது)
05) தொலைக்காட்சி நேரடிக் கலந்துரையாடல் மேற்கொள்ளும் போட்டி (சிரேஷ்ட) -மாணவர்/ஆசிரியர் (சிங்களம்/தமிழ்)
06) தினசரி பத்திரிகை செய்திப் பகுப்பாய்வுப் போட்டி (சிரேஷ்ட)-மாணவர்/ஆசிரியர் (சிங்களம்/தமிழ்)
07) வானொலி செய்தி ஒலிபரப்புப் போட்டி (கனிஷ்ட/ சிரேஷ்ட)- மாணவர்/ஆசிரியர் (சிங்களம்/தமிழ்)
08) காட்டூன் சித்திர ஆக்கப் போட்டி (கனிஷ்ட/சிரேஷ்ட)-மாணவர், பழைய மாணவர் (சிங்களம்/தமிழ்)
09) முத்திரை சேகரித்தல் போட்டி (கனிஷ்ட/சிரேஷ்ட) - மாணவர், பழைய மாணவர் (சிங்களம்/தமிழ்)
10) வாய்மொழி பகுப்பாய்வுப் போட்டி (சிரேஷ்ட)- மாணவர்,/ஆசிரியர் (சிங்களம்/தமிழ்)
11) கணினி கிரஃபிக் நிர்மாணப் போட்டி (கனிஷ்ட/சிரேஷ்ட)- மாணவர் (சிங்களம்/தமிழ்)

**குழுநிலைப் போட்டிகள்:**

12) நகைச்சுவை நடிப்புப் போட்டி (கனிஷ்ட/ சிரேஷ்ட)-மாணவர் (சிங்களம்/தமிழ்)
13) சுவரொட்டி நிர்மாணப் போட்டி (கனிஷ்ட/ சிரேஷ்ட)-மாணவர் (சிங்களம்/தமிழ்)
14) சுவர்ப்பத்திரிகை நிர்மாணப் போட்டி (சிரேஷ்ட)-மாணவர்/ஆசிரியர் (சிங்களம்/தமிழ்)
15) நேரடித் தகவல் வழங்கும் போட்டி (சிரேஷ்ட)-மாணவர்/ஆசிரியர் (சிங்களம்/தமிழ்)
16) பாடசாலை வானொலிக் கலை ஒலிபரப்புப் போட்டி (கனிஷ்ட/சிரேஷ்ட)-மாணவர் (சிங்களம்/தமிழ்)

**தனிநபர்/குழுநிலை போட்டி:**

17) பாடசாலை ஊடக சஞ்சிகைப் போட்டி (கனிஷ்ட/சிரேஷ்ட)-மாணவர் (சிங்களம்/தமிழ்)

✱ ஊடக சஞ்சிகையானது, A4 தாளில் 16 பக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும். சஞ்சிகையின் முன் அட்டையும் அதில் அடங்கும். சஞ்சிகையை வடிவமைப்பதற்குத் தேவையான கத்திரிக்கோல், கம், வர்ணங்கள், பேனா, அடிமட்டம், வர்ணக் கடதாசி போன்றவற்றை உடன் கொண்டு வரலாம். எனினும், உள்ளடக்கங்களை போட்டி இடம்பெறும் இடத்திலேயே எழுத வேண்டும்.

1) **நேரம்:** 2 மணித்தியாலங்கள்

2) **நிபந்தனைகள்:** முன் அட்டை ஆக்கபூர்வமானதாகவும் கவரும் விதத்திலும் வடிவமைக்கப்படல் வேண்டும். பக்கங்களைத் திட்டமிட்டிருத்தல் வேண்டும். உள்ளடக்கங்களில் படைப்பாற்றல் வெளிப்படுத்தப்பட்டிருப்பதோடு, வாசிப்பதற்கு ஆர்வமூட்டுவதாகவும் சரியான மொழிநடையிலும் இருக்க வேண்டும்.

10. வெற்றிபெற்றவர்களின் விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல்.
    பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொள்கின்ற வெற்றியாளர்களின் பெயர்ப் பட்டியலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், மாகாண மட்டத்தில் நடாத்தப்படுகின்ற போட்டிகளுக்கான விண்ணப்பங்களை **மஹரத்மல செயலாளர் அலுவலகம், மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
11. மத்திய மாகாண மஹரத்மல பாடசாலை ஊடக விருது விழா-2012 தொடர்பிலான எந்தவொரு பிரச்சினையின்போதும் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரின் தீர்ப்பே இறுதி முடிவாக அமையும்.

**மேலதிக விபரங்களுக்கு:**

மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 0812224041 ext: 220 (மஹரத்மல செயலாளர் அலுவலகம்) என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அலுவலக நேரங்களில் தொடர்புகொள்ளலாம். ஜே.டி.தர்மபிரிய - 0714462949, ஷானிகா மலல்கொட - 0718001506, இந்திக செனவிரத்ன 0716858366/0727858366.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலை அக்கறையுடன் மேற்கொள்ளுங்கள்

*நாம் கற்கும் கல்வியானது, எமது அறிவை வளர்ப்பதோடு மட்டுமன்றி, எம்மைப் பகுத்தறிவுள்ள மனிதனாகவும் ஆக்கக்கூடியது. அந்தவகையில், கல்வி கற்பது எமக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய வாய்ப்பாகும். அவ்வாறான தொரு வாய்ப்பை நாம் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.*







பெற்றோர்களது கட்டாயப்படுத்தலினால் மாணவர்கள் கற்பதோ அல்லது ஆசிரியர்களின் புத்திமதிகளை வற்புறுத்தலாக ஏற்றுக்கொண்டு கல்வி கற்பதோ, எமக்கு எவ்வகையிலும் பலனளிக்காது. எனவே, கல்வியின் பயனை அடைய வேண்டுமாயின், ஒவ்வொரு மாணவரிடத்திலும் ''நான் கல்வி கற்க வேண்டும்; அறிவைத் தேட வேண்டும்'' என்ற எண்ணம் காணப்பட வேண்டும். ஆனால், தற்காலத்தில் எத்தனையோ மாணவர்கள் திணிப்பின் அடிப்படையில் ஏனையோரின் வற்புறுத்தலுக்காகவே கல்வி கற்கின்றனர். எனினும், இத்தகைய வெறுப்பான எண்ணத்தோடு கற்றுக்கொள்வார்களேயானால், கற்றல் நடவடிக்கைகளை சரியான முறையிலும் பயனுள்ள முறையிலும் மேற்கொள்வது கடினமான செயலாக மாறிவிடும். அத்துடன், கல்வி கற்பதற்காக, தங்கள் பெற்றோர்கள் கொடுக்கும் அறிவுரைகளையும் ஊக்கத்தையும் மாணவர்கள் திணிப்பாகக் கருதாமல், அவற்றை தமது முன்னேற்றத்திற்கான சாதக வழிகளாக நினைத்து, அவற்றை உள்வாங்கி விருப்பத்தோடு செயற்பட வேண்டும்.

## கல்வி

## முகாமைத்துவம் - 99

### கற்றலுக்கான ஆலோசனைகள்



பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லும்படியோ அல்லது குறிப்பிட்ட நேரத்தில் கற்றலை மேற்கொள்ளும்படியோ பெற்றோர்கள் அறிவுரை கூறும்பட்சத்தில் மாணவர்கள் அவற்றை ஒரு திணிப்பாக நினைத்துச் செய்யாமல், பெற்றோர்களுடன் கலந்துரையாடி தனக்குத் தேவை எனக் கருதும் பிரத்தியேக வகுப்புக்குச் செல்லலாம். அவ்வாறே, வீட்டில் இருக்கும்போது, தனக்குக் கற்பதற்கு ஏற்ற நேரத்தை ஒதுக்கி, அதற்கமைய மாணவர்கள் கற்றலில் ஈடுபட வேண்டும்.

மாணவர்களாகிய உங்களிடம் எத்தனையோ ஆற்றல்கள், திறமைகள் காணப்படலாம். சிலவேளை, அவை வெளியில் பிரயோகிக்கப்படாமல் இருக்கலாம். இந்நிலையில், பாடங்களைத் தெரிவுசெய்யும்போதோ அல்லது ஆக்கவேலைகளில் ஈடுபடும்போதோ மாணவர்களாகிய நீங்கள் உங்களிடம் காணப்படும் திறமைக்கமையவும் விருப்பத்திற்கமையவும் பாடத் தெரிவுகளை அல்லது ஆக்கவேலைகளை மேற்கொள்ளுங்கள். மாறாக, பெற்றோரின் திணிப்பிற்காகவோ அல்லது ஏனையோரின் விருப்பத்திற்கமையவோ தெரிவுகளை மேற்கொள்ள வேண்டாம். ஏனெனில், அவ்வாறு செய்தால் எதையும் கற்றுக்கொள்ளும் விருப்பம் குறைவாகவே இருக்கும். காரணம், உங்கள் மனம் உங்களுக்கு விருப்பமான பாடம் சம்பந்தமான அம்சம் பற்றியே அலைபாயும். ஆகவே, மற்றவர்களது திணிப்பை அப்படியே ஏற்றுச் செய்யாமல் அவர்கள் சொல்வதையும் கேட்டு, உங்கள் விருப்பத்திற்கமைய, உங்களுக்கு பயனுள்ளதைத் தெரிவுசெய்துகொள்ள வேண்டும்.

மேலும், ஆசிரியர் வகுப்பறையில் பயிற்சிகள் ஏதும் கொடுத்தால், எப்படியாவது அவற்றைச் செய்துகொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படாமல், விருப்பத்தோடும் உற்சாகத்தோடும் பயிற்சிகளைச் செய்ய வேண்டும். அநேகமான மாணவர்கள் பரீட்சை நெருங்கிவிட்டால், பரீட்சைக்கு முன்னர் முழுவதையும் படித்து முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தம்மை வருத்தி, இரவு முழுவதும் விழித்திருந்து கற்றலில் ஈடுபடுவர். இது தவறான செயற்பாடாகும். இத்தகைய செயற்பாட்டினால் எதுவும் இலகுவில் மனதில் பதியாது.

எனவே, எமது கற்றல் நடவடிக்கைகள் எப்போதும் பரீட்சைக்கு எம்மைத் தயார்ப்படுத்துவதற்கு ஏற்றவிதத்திலும் சிறந்த அறிவைப் பெற்று சிறந்த மாணவராகத் திகழ வேண்டும் என்ற எண்ணத்துடனுமே அமைய வேண்டும். அதற்காக, கற்றல் நடவடிக்கைகளில் மாணவர்கள் அன்றாடம் அக்கறையோடு ஈடுபட வேண்டும். அப்போதுதான் நாம் கற்றுக்கொள்பவை மனதில் ஆழமாகப் பதிந்து நிலைத்து நிற்கும். (தொடரும்)



**-எம்.ஏ.எஃப்.சப்ரானா**



# 'ஐஸ் ஏஜ்' திரைப்படத்தின் அணில் நிஜமானது!

## படிம ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு

'ஐஸ் ஏஜ்' திரைப்படம் உலகம் முழுவதும் திரையிடப்பட்டு அமோகமான வரவேற்பினைப் பெற்றிருந்தமை நீங்கள் அறிந்ததே! பூமியில் பனிக்காலம் நிலவிய காலகட்டத்தில் வாழ்ந்த 'மெமத்' என்ற யானை, 'சேபர்டூத்' என்ற ஓநாய் மற்றும் குரங்கு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட நகைச்சுவை கலந்த இந்த ஐஸ் ஏஜ் திரைப்படத் தொடர் மூன்று பாகங்களைக்கொண்டது. இதன் நான்காவது பாகம் இந்த ஆண்டு (2012) திரையிடப்படவுள்ளது.

இந்த ஐஸ் ஏஜ் திரைப்படத்தில் மற்றுமொரு வியப்பான கதாபாத்திரம் உள்ளது. அதுதான் நீண்ட மூக்கும் கூர்மையான இரண்டு முன் பற்களையும் கொண்ட எலி போன்ற தோற்றத்திலான அணில் ஆகும். அதன் பெயர் 'ஸ்க்ரெட் (Scrat) என்பதாகும். ஐஸ் ஏஜ் திரைப்படத்தில் வரும் இந்த அணிலின் காட்டூன் சலன கதாபாத்திரமானது, வெறும் திரைப்பட கதாபாத்திரத்திற்காக உருவாக்கப்பட்டதொன்றன்று; மாறாக, இது போன்ற தோற்றத்தினை உடைய விலங்கினமொன்று ஆதிகாலத்தில் உலகில் வாழ்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.



அண்மையில் ஆர்ஜன்டீனாவில் இத்தகைய விலங்கினத்தினை ஒத்த விலங்கொன்றின் மண்டையோட்டின் ஒரு பகுதி, கீழ்த்தாடை எலும்பு என்பனவற்றின் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, இத்தகவல் வெளியாகியுள்ளது. தமக்குக் கிடைத்த இந்த படிமங்களைக்கொண்டு படிம ஆராய்ச்சியாளர்கள் இந்த வியப்பான விலங்கினத்தை ஒத்த உருவத்தை உருவாக்கினர். அண்மையில் அத்தகவலை ஊடகங்களுக்கும் வழங்கியிருந்தனர். உருவ அமைப்பில் இந்த விலங்கு எலியை ஒத்தது என்றும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது, படிம ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்திருந்தனர். டைனோசர்கள் வாழ்ந்த காலத்தில்தான் இந்த அணிலினமும் பூமியில் வாழ்ந்துள்ளது என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர். இதன்படி, பாலூட்டி விலங்கினங்களின் அதாவது, எமது ஆதிகால உறவினமாக இந்த உயிரினத்தைக் குறிப்பிடலாம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.




டைனோசர்கள் வாழ்ந்த காலப்பகுதியில் தென் அமெரிக்க பகுதிகளில் வாழ்ந்த விலங்குகளில் சிலவற்றினது எச்சங்கள் மட்டுமே இதுவரை, விஞ்ஞானிகளுக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் இந்த அணில் முக்கியமானதாகத் திகழ்கின்றது. இந்த அணிலினமானது, 10 சென்ரி மீற்றருக்கும்14 சென்ரிமீற்றருக்கும் இடைப்பட்ட உடலளவைக் கொண்டிருக்கும். இதன் வாய்ப்பகுதியில் முன்நோக்கி நீண்டதாக இரண்டு கூரிய பற்கள் காணப்படுவதோடு, இதன் மூக்கும் மிகவும் நீண்டதாகக் காணப்படுகின்றது. விஞ்ஞானிகள் இதற்கு 'க்ரொனோபியோடென்டியாக்குட்டுஸ்' எனப் பெயரிட்டுள்ளனர்.

''இந்த உயிரினம் 93 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்துள்ளது. அது க்றிடேசிய யுகமாகும். சரியாகக் கூறுவதானால், 114-65 மில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலேயே இந்த விலங்கினம் பூமியில் வாழ்ந்துள்ளது. டைனோசர் வாழ்ந்த காலப்பகுதியில் பாலூட்டி விலங்கினத்திற்கு தனியிடம் வழங்கப்பட்டிருக்கவில்லை. பெரும்பாலான பாலூட்டி விலங்குகள் தரைக்குக் கீழாக பொந்துகளை அமைத்தே வாழ்ந்து வந்தன. பகல்பொழுதுகளில் தரைக்குக்கீழ் பதுங்கி வாழ்ந்து, இரவிலேயே அவை இரை தேடி வெளியில் வந்தன'' என செபஸ்டியன் எபெஸ்டெகுயா என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார். க்ரொனோபியோடென்டியாகுட்டுஸ் எனும் இந்த அணிலினத்தின் படிமத்தைக் கண்டுபிடித்த படிம ஆராய்ச்சியாளர்களில் இவரும் ஒருவராவார். (-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் சேவையின் வரலாறு


பண்டைய தபால்சேவகரின் தோற்றத்தைக் காட்டும் உருவச்சிலை


தபால் சேவைக்குப் பயன்பட்ட பண்டையகால சைக்கிள்


பண்டைய கால நில முத்திரைகளில் சில..



இலங்கையின் முதல் முத்திரை

WORLD POST DAY 9 OCTOBER

**இன்றைய உலகில் செய்திப்பரிமாற்றமானது, நவீன முறையில் பல்வேறு விதமாக நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. எனினும், இவற்றில் நீண்ட வரலாற்றைக்கொண்ட தபால் சேவையானது, தற்போதும்கூட முக்கிய இடம் வகிக்கவே செய்கின்றது. இத்தகைய சிறப்பு மிக்க தபால் சேவையின் வரலாறு பற்றி சற்று ஆராய்வோம்.**

## தபால் சேவையின் ஆரம்பம்

பண்டையகாலம் முதல் செய்திப் பரிமாற்றத்துக்கெனப் பல்வேறு முயற்சிகள் கையாளப்பட்டிருக்கின்றன. எனினும், கி.மு. 4000-2500 வரையிலான காலப்பகுதிகளில் எகிப்திய கலாசாரமே இதனை அறிமுகப்படுத்தியதாக வரலாறுகள் கூறுகின்றன. ஓவியச் சொற்களால் செதுக்கப்பட்ட களிமண் பலகைகள் கடிதமாக பரிமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. அதுபோன்று, மேலும் சில விடயங்கள் செய்திப் பரிமாற்றத்துக்கென பயன்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன;

* கி.மு. ஆறாம் நூற்றாண்டில் 143 மைல் தூரம் வரை செல்லும் பயணச் செய்திப் பரிமாற்றம் கிரேக்க நாட்டில் இருந்துள்ளது.
* கி.மு. 550 ஆம் ஆண்டில் உலகின் மத்திய பகுதியோடு, பாரசீக வளைகுடாவைச் சூழவுள்ள நாடுகளும் செய்திப் பரிமாற்றம் செய்து வந்ததற்கும் ஆதாரங்கள் உள்ளன.
* கி.பி.618 ஆம் ஆண்டில் சீனாவின் டெங் யுகத்தில் குதிரை வண்டிகள்மூலம் 150 மைல் தூரம் சென்ற அதிவேக செய்திப் பரிமாற்ற சேவை இருந்திருக்கின்றது.
* கி.பி.960 ஆம் ஆண்டு முதல் கி.பி.1276 ஆம் ஆண்டு வரை சீனா இவ்விடயத்தில் சிறப்புற்று விளங்கியது.

செய்திகளைக் கையில் எடுத்துச் செல்வோர், குதிரை வண்டிகளில் கொண்டு செல்வோர், நேரடியாகக் கண்டு அறிவிப்போர் என மூன்று வகைகளில் அங்கே தபால் சேவை நிகழ்ந்தது. அதுவே அன்றைய யுகத்தில் உலகின் மிகப்பெரும் தபால் சேவையாகவும் திகழ்ந்தது. மூவகை கட்டண முறைகளின்கீழ் அந்த தபால்சேவை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

* 13 ஆம் நூற்றாண்டில் மதப் பிரச்சாரத்துக்காக, இத்தாலி தபால் சேவையைக் கையாண்டது.
* 16 ஆம் நூற்றாண்டில் ரோம சாம்ராஜ்யப் பிரபுக்களின் தனிப்பட்ட தேவைகளுக்காகத் தனியாக ஒரு தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது.


இவ்வாறு உலகெல்லாம் பல்வேறு வடிவங்களில் செய்திப் பரிமாற்றம் நிகழ்ந்து வந்திருந்தபோதும், 1635 ஆம் ஆண்டில்தான் இங்கிலாந்தில் முறையான தபால் சேவை ஆரம்பமானது. அப்போது எட்வர்ட் மன்னரே அங்கு ஆட்சி புரிந்துகொண்டிருந்தார். எனினும், 1840 ஆம் ஆண்டில் ஆரம்ப முத்திரை வெளியிடப்பட்ட பின்னரே தபால் சேவையின் புதுயுகம் ஆரம்பமானது. அத்தோடு கல்வி, தேச சஞ்சாரம், சர்வதேச வர்த்தகம், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியும் தபால் சேவையின் முன்னேற்றத்துக்கு வழிகோலின.

## இலங்கை தபால் சேவையின் வரலாறு

17 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிகளில் ஒல்லாந்தரே தபால் சேவையை இலங்கைக்குக்கொண்டு வந்தனர். அவர்கள் தமது குடியேற்ற நாடுகளில் செய்திப் பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கென விசேட படகுச் சேவையையும் ஆரம்பித்திருந்தனர். அதனை 'பெக்கட் படகுச் சேவை' என அழைத்தனர். கடல் வழியாக இந்த செய்திப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தமையால், அவர்கள் தமது ஆட்சிக்குட்பட்ட கொழும்பு, காலி, திருகோணமலை, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் தபால் நிலையங்களை அமைத்தனர். பின்னர், இந்நாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களிலும் தபால் நிலையங்களை அமைப்பதற்கான செயற்றிட்டங்களை மேற்கொண்டனர்.

எனினும், அவர்களின் நிர்வாகத்திற்குட்பட்ட இலங்கையின் கரையோரப் பகுதிகள் 1796 ஆம் ஆண்டில் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டன. எனவே, பிரித்தானியரே கெப்டன் கென்னடி என்பவரை இலங்கையின் முதல் தபால் அதிபராக நியமித்தனர்.

1815 ஆம் ஆண்டு கண்டியரசு வீழ்ச்சியடைந்ததோடு, முழு இலங்கையும் இங்கிலாந்தின் காலனித்துவ நாடாகியது. 1830 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தோட்டக் கைத்தொழில் ஆரம்பிக்கப்பட்டமையால் தபால் சேவையின் முக்கியத்துவம் உணரப்பட்டது. எனவே, ஆங்கிலேயர் பல்வேறு இடங்களிலும் தபால் நிலையங்களை அமைத்துத் தபால் சேவையை விரிவுபடுத்தினர். அதன்மூலம் இலங்கையின் முதல் தபால் மா அதிபராக வாசல முதலி ஏ.ஜி.திலகரத்ன என்பவரே நியமிக்கப்பட்டார்.


பண்டைய காலத்தில் தபால் பொதி ஏற்றிச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட வண்டி

## முத்திரை உருவாக்கம்

முத்திரை உருவாகுமுன்னர் ஆட்சியாளருக்கும் பிரபுக்களுக்கும் செல்வந்தர்களுக்கும் மட்டுமே தபால் சேவை சொந்தமாக இருந்தது. பிற்காலத்தில்தான் பரவலாக சாதாரண மக்கள் மத்தியிலும் புழக்கத்துக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வந்தது. அக்காலத்தில் கடிதத்தை எழுதி அனுப்புவோர் ஒரு சதமேனும் செலுத்தவேண்டியதில்லை. தாள்களின் எண்ணிக்கை, கொண்டுவரவேண்டிய தூரத்தின் அளவு ஆகியவற்றைக் கணக்கிட்டுக் கடிதத்தைப் பெற்றுக் கொள்பவரே, அதற்கான தொகையை செலுத்திக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எனினும், சிலர் பணம் கொடுத்து கடிதத்தைப் பெற்றுக் கொள்ள மறுத்தமையால், நிர்வாகத்துக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

அதனால், தபால் சேவை சீர்குலைய ஆரம்பித்தது. எனவேதான் அதற்குரிய நடவடிக்கையாக ரோலன்ட் ஹீல் என்பவர் முத்திரையை உருவாக்கும் ஆலோசனையை முன்வைத்தார். அதன் அடிப்படையிலேயே 1840 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி உலகின் முதல் முத்திரையான 'பெனிபிளெக்' எனும் முத்திரை வெளியிடப்பட்டது. விக்டோரியா மகாராணியின் உருவப்படத்தைக் காட்டும் அந்த முத்திரையின் பெறுமதி ஒரு பென்ஸாகும். அதில் அதை உருவாக்கிய நாட்டின் பெயர் குறிக்கப்படாதிருந்தமையே அதன் சிறப்பம்சமாகும். அன்று முதல் இன்றுவரை இங்கிலாந்து வெளியிடும் முத்திரைகளில் அந்நாட்டின் பெயர் குறிக்கப்படுவதில்லை. உலகில் சொந்த நாட்டின் பெயரைக் குறிக்காமல் முத்திரை வெளியிடும் ஒரே நாடு இங்கிலாந்தேயாகும். உலகின் முதல் முத்திரையை வெளியிட்ட இங்கிலாந்து நாட்டை கௌரவிப்பதற்காகவென உலகத் தபால் ஸ்தாபனம் அதனை ஏற்றுக்கொண்டது. 1857 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதிதான் இலங்கையின் முதல் முத்திரை வெளியிடப்பட்டது. விக்டோரியா மகாராணியின் உருவப் படமுள்ள அதன் பெறுமதி ஆறு பென்ஸாகும்.


தபால் நூதனசாலையின் காட்சிக்கூடம்



## முத்திரைக் கிளைக் காரியாலயம்

1967 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தபால் தொலைத் தொடர்புகள் திணைக்களத்தின்கீழ் முத்திரைக் கிளைக் காரியாலயம் உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னரும் கூட, மத்திய தபால் நிலையத்தில் அதற்கென ஒரு கிளை இருக்கவே செய்தது. திட்டமிடுதல், அச்சிடுதல், வெளியிடுதல் ஆகியவற்றை 1972 ஆம் ஆண்டு வரை தேசிய ஆதாயத் திணைக்களத்திற்கே வழங்கியிருந்தார்கள். எனினும், 1972 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவை கிளைக் காரியாலயத்தில் உள்ளடக்கப்பட்டன. முத்திரை, கடித உறை, கடிதத்தாள், விமானக் கடிதம், நினைவுறுத்தல் பத்திரம் ஆகியவற்றைத் தயாரித்தல், அச்சிடுதல், வெளியிடுதல் ஆகிய செயற்பாடுகள் அதன் பிரதான விடயங்களாகும்.

## கடித உறையின் உருவாக்கம்

கடித உறை உருவாகுமுன்னர் கடிதத்தை மடித்துப் பின்பக்கத்தில் விலாசம் எழுதி, பிரியாமல் ஒட்டி விடுவார்கள். 1830 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ப்ரேவர் எனும் புத்தக விற்பனையாளரே, முதன்முதலாகக் கடிதத்தை வைக்க உறையொன்றைத் தயாரித்தார். அன்றுமுதல் இன்றுவரை அதுவே நடைமுறையில் இருந்து வருகின்றது.

## தபால் அட்டை (Post Card)

தபால் எனும் சொல்லை ஆங்கிலத்தில் 'போஸ்ட்' என்கின்றார்கள். குதிரை வண்டிகளில் தபால் சேவை நிகழ்ந்த காலத்தில் தூரப்பயணங்களின்போது, குதிரைகள் களைப்புற்றால் அவற்றை அங்கேயே நிறுத்திவிட்டு வேறு குதிரைகளை எடுத்துக்கொள்ளும் இடங்கள் இருந்தன. 'Staging Post' (ஸ்டேஜிங் போஸ்ட்) என்றே அந்த இடம் அழைக்கப்பட்டது. அதன் காரணமாகவே, 'போஸ்ட்' எனும் சொல் வந்ததாகக் கூறப்படுகின்றது. அச்சொல் Posita (போஸிடா) எனும் மூலச் சொல்லிலிருந்து வந்தது. இடம்,செயல், சந்திப்பு எனும் அர்த்தங்கள் அதற்குள்ளன. அது லத்தீன் சொல்லாகும்.

## தபால் நிலையம்

இலங்கை தபால் திணைக்களத்தின்கீழ் ஐந்து வகை தபால் நிலையங்கள் இருக்கின்றன. அவை ; தபால் நிலையம், உப தபால் நிலையம், முகவர் தபால் நிலையம், கிராமிய முகவர் தபால் நிலையம், தோட்டத்துறை முகவர் தபால் நிலையம் ஆகியவையாகும். நாடு முழுவதிலும் செயற்படும் தபால் நிலையங்களில் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

தபால் நிலையங்கள் -648
உப தபால் நிலையங்கள் - 3,410
முகவர் தபால் நிலையங்கள் -463
கிராமிய முகவர் தபால் நிலையங்கள் -156
தோட்டத்துறை முகவர் தபால் நிலையங்கள் - 65


## தேசிய தபால் நூதனசாலை

ஜனாதிபதி மாளிகைக்கருகிலுள்ள தலைமைத் தபால் நிலையத்திலேயே, தேசிய நூதனசாலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், தாக்குதல் ஒன்றினால் சேதமுற்றிருந்தமையால் அது மூடப்பட்டிருந்தது. இந்நிலையில்தான் 2005 ஆம் ஆண்டு டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் புதிய தபால் தலைமையகம் கட்டப்பட்டது. அதில்தான் 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் திகதி புதிய தேசிய தபால் நூதனசாலை திறந்து வைக்கப்பட்டது. இலங்கை தபால் சேவையினதும் தொலைத்தொடர்பினதும் ஞாபகத்துக்கான களஞ்சியப் பொருட்கள் சிலவும் முத்திரையின் ஆரம்பகால வரலாறும் அதை ஞாபகப்படுத்தும் சில முத்திரைகளும் அங்கே இன்றும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

# நீங்கள் உங்களை நம்புங்கள்...

# சாதிக்கலாம்!




நீங்கள் எடிசனை விடவும் புத்திசாலி! நியூட்டனை விடவும் அறிவாளி! அவர்களை விடவும் உங்களால் எவ்வளவோ சாதிக்க முடியும். என்ன? நம்ப முடியவில்லையா? கொஞ்சம் சிந்தித்துப்பாருங்கள்.... இன்று, இரவில் உங்களுக்கு ஒளி வேண்டுமானால் என்ன செய்வீர்கள்? ஆளியை (ஸ்விட்ச்) அழுத்தினால் மின்குமிழ் ஒளிரும். எவ்வளவு இலகு! ஆனால், இதைக் கண்டுபிடித்த எடிசன் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டிருப்பார். எந்த இழையைப் பாவிக்கலாம் என்று தெரியாமல் யோசித்திருப்பார்! அதைப்போலத்தான் நியூட்டனும். மேலே எறியும் பந்து மீண்டும் கீழே ஏன் விழுகிறது? என்று உங்களிடம் கேட்டால், 'புவியீர்ப்பு' என்று சாதாரணமாகச் சொல்லி விடுவீர்கள்; ஆனால் நியூட்டன் மூளையைக் குடைந்து சிந்தித்த பின்தான் இந்த முடிவை எட்டினார்.

எடிசன், நியூட்டன் போன்ற விஞ்ஞானிகள் பலவருடங்கள் பாடுபட்டு, தங்கள் வயோதிபத்தில் கண்டறிந்த விடயங்கள், இந்த இளம் வயதிலேயே கஷ்டப்படாமல் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆகவே, நீங்கள் கொஞ்சம் முயற்சித்தால் அவர்களை விடவும் உயர்ந்த இடத்திற்கு சென்றுவிடலாம் அல்லவா? அன்றைய விஞ்ஞானிகள் கற்பனை செய்திராத பல விடயங்களை இன்று நீங்கள் காண்கிறீர்கள். அவர்கள் கனவிலும் நினையாத கண்டுபிடிப்புகள், இன்று உங்கள் கைகளில் தவழ்கின்றன. இன்று நீங்கள் நினைத்தால், நாளைய உலகை மாற்றலாம்.



'படித்தோமா, நல்ல வேலையைத் தேடினோமா, சம்பாதித்தோமா' என்று குறுகிய வட்டத்துக்குள் நின்று சிந்திப்பதை நிறுத்துங்கள். உலகம் பரந்தது-அதில் எங்கு வேண்டுமானாலும் உங்களுக்கென்று ஓர் இடம் இருக்கலாம்! 'அளவுக்கு மீறி' ஆசைப்படக்கூடாதுதான். ஆனால், அது எந்த 'அளவு?' இலங்கையில் பிறந்த ஒருவர் நிலவில் கால்தடம் பதிக்கக்கூடாதா? இல்லை, உலகே அதிசயிக்கும் ஒரு கண்டுபிடிப்பை நிகழ்த்தக் கூடாதா? முதலில் உங்களிடம் நம்பிக்கை இருக்க வேண்டும். ஐன்ஸ்டைனின் விதிகளை அவர் முதலில் நம்பியிருக்க வேண்டும். இல்லையேல், அவரின் கொள்கைகள் விதிகளாக மாறியிருக்காது. எனவே, முதலில் நீங்கள் உங்களை நம்புங்கள் பின்னர் பிறரை நம்பவைக்கலாம்!






நியூட்டனைப்போல் நீங்களும் ஆப்பிள் விழும்வரை காத்திருக்கத் தேவையில்லை. நீங்களே வெற்றியை தேடிச் செல்லலாம். பாடசாலைக் கல்வியோடு நின்றுவிடாதீர்கள். 'அறிவு' பாடப்புத்தகங்களில் மட்டுமல்ல; அனைத்திலுமே உள்ளது. அனைவரிடத்திலுமே உள்ளது. முடிந்தவரை அறிந்து கொள்ளுங்கள்; கற்றுக்கொள்ளுங்கள்!

'இதை தெரிந்து என்ன செய்யப்போகிறோம்? அதை அறிவதால் என்ன பயன்?' என்கிற எண்ணத்தைக் கைவிடுங்கள். அறிவை, வளர்க்கக்கூடிய, ஆரோக்கியமான விடயம் எதுவாகிலும் அதனை விட்டுவைக்க வேண்டாம். நீங்கள் சிறுவயதில் கற்கும் எந்த விடயமும் பின்நாளில் பயன்தரலாம். பழையதை மாற்றுங்கள்; புதிதாகச் சிந்தியுங்கள்; சாதித்துக் காட்டுங்கள்; நீங்கள் விண்ணுக்கு ஏவப்படவுள்ள ரொக்கெட்டுக்கள் என்பதை மறக்க வேண்டாம்.

**-விபாகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேசிய இலச்சினை


ரோயல் மாளிகை (நோர்வே அரசமாளிகை)







The Storting (நோர்வே நாடாளுமன்றம்)


நொபெல் சமாதான விருது மத்தியநிலையம்

**அரசு:** ஒரு சட்டசபையைக்கொண்ட பலகட்சி வரம்புடைய முடியாட்சி.

**உருவாக்கம்:** ஐக்கியப்படுத்தியது 872; அரசியலமைப்பு 1814 மே 17 ; ஐக்கிய சுவீடனில் இருந்து விடுவிப்பு 1905 ஜூன் 7 ; ஜேர்மனியிடமிருந்து மீட்டல் 1945 மே 8 .

**தேசிய பெயர்:** கொன்கெரிகெட் நோர்ஜ்.

**தேசிய விடுமுறை தினம்:** அரசியலமைப்பு தினமாகிய மே 17.

**மன்னர்** (1991): 5 ஆம் ஹெரல்ட்.

**பிரதமர்** (2005):ஜேன்ஸ் ஸ்டோல்டென் பெர்க்.




## புவியியல்

அதிக மலைகளைக்கொண்ட ஐரோப்பிய நாடுகளில் நோர்வேயும் ஒன்றாகும். இந்நாடு வடக்குத் தெற்காக, ஸ்கெண்டிநேவிய மலைத் தொடர்களால் பிரிக்கப்பட்டுள்ளது. நோர்வேயின் கிழக்கில் சுவீடனும் வடகிழக்கில் பின்லாந்து மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் குடியரசுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. சதுப்பு நிலங்களும் மேட்டுநிலங்களும் ஆழமான காட்டுப் பள்ளத்தாக்குகளும் மிகப் பெரிய பனிப்பாறைகளும் இங்கு நிறைந்துள்ளன. இங்கு 150,000 இற்கும் மேற்பட்ட ஏரிகள் காணப்படுகின்றன. 'எம்ஜோஸா' எனும் ஏரியே மிகப்பெரியது. க்ளாமா எனும் நீளமான நதி உள்ளிட்ட, பல நதிகள் இங்கு பாய்கின்றன.

**மொத்தப்பரப்பு:** 125,181 ச.மைல் (324,220 ச.கி.மீற்றர்).

**நிலப்பரப்பு:** 118,865 ச.மைல் (307,860 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 19 நிர்வாகப் பிராந்தியங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** ஒஸ்லோ.

**ஏனைய பெரிய நகரங்கள்:** பெர்கன், ஸ்டாவேன்ஜர், ட்ரொந்தெம்.

**உயர் மலைச்சிகரம்:** கல்தோபிஜன் (2,469 மீற்றர்).

**தாழ்மையம்:** நோர்வேஜியன் கடல்.

**சனத்தொகை** (2010): 4,676,305.

**நாணயம்:** நோர்வேஜியன் க்ரோன்.

**மொழிகள்:** பொக்மல் நோர்வேஜியன், நைநோஸ்க் நோர்வேஜியன் (இரண்டும் அலுவலக மொழிகள்); சிறியளவில் செமி மற்றும் ஃபின்னிஷ் மொழிகள்.

**இனக்குழுவினர்கள்:** நோர்வேஜியன், செமி.

**சமயங்கள்** (2004): இவேன்ஜலிக்கல் லுத்தரன் 86%, பெந்தகோஸ்து 1%, ரோமன் கத்தோலிக்க திருச்சபை 1%, ஏனைய கிறிஸ்தவம் 2%.




Vigeland பூங்கா



**எழுத்தறிவு** (2003):100%

**இணையத்தளக் குறியீடு:** .no

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 47

**தேசிய கீதம்**

Ja, vi elsker dette landet,
som det stiger frem,
furet, værbitt over vannet,
med de tusen hjem,… என ஆரம்பமாகின்றது.




## வரலாறு

டியூடோனிக் எனும் ஆதிவம்சக்குடிகளே நோர்வேஜியன்களாவர். ஒரு காலத்தில் 'வைகிங்ஸ்' என அழைக்கப்பட்ட இவர்கள், வடமேற்கு ஐரோப்பிய கரையோரப் பிரதேசங்கள் முழுவதையும் தமது ஆயுத பலத்தால் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். 8 ஆம் நூற்றாண்டு முதல் 11 ஆம் நூற்றாண்டு வரை இவர்களின் ஆட்சி அதிகாரம் நீடித்தது. எனினும், ஒலாஃப் இரண்டாம் ஹெரல்ட் சன் எனும் மன்னன் 1015 இல் நோர்வேயில் முறையான மன்னராட்சியைக் கொண்டு வந்தார். 1442 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நோர்வே நாடானது, டெனிஷ் மன்னர்களால் ஆளப்பட்டது. 1814 வரை இவ்வாட்சி நீடித்தது. 1814 இல் சுவீடனுடன் இணைக்கப்பட்ட பொழுதிலும் 1905 இல் மீண்டும் பிரிந்தது. 1945 மே 8 இல் சுதந்திரம் அடைந்தது.

## கலாசாரம்

நோர்வே நாட்டின் கலாசாரமானது, அந்நாட்டின் வரலாற்றோடும் புவியியல் காரணிகளோடும் பின்னிப் பிணைந்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டில் நோர்வேஜியன் கலாசாரம் உன்னதநிலையை அடைந்தது. குறிப்பாக; இலக்கியம், கலை, மற்றும் இசை போன்ற துறைகளில் பெரிதும் வளர்ச்சிகண்டது.

## காலநிலை

நோர்வேயில் கோடைகாலத்தில் குளிர் அதிகமாகக் காணப்படும். மாரிகாலத்தில் மேற்குக் கரையோரப் பிரதேசங்களில் அதிக மழைவீழ்ச்சி காணப்படுவதோடு, உள்நாட்டில் மழைவீழ்ச்சியின் அளவு குறைந்தே காணப்படும். இக்காலத்தில் நாட்டின் மத்திய மற்றும் வட பிரதேசங்களிலுள்ள மலைத்தொடர்களில் அதிகளவு பனிப்பொழிவு நிகழும்.

# நோர்வே

தலைநகரின் ஒரு பகுதி



## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006):பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 2.055 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 5.041 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 5, FM குறைந்தபட்சம் 650, SW 1. **தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1995): 360. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 2.084 மில்லியன்; இணையத் தளப் பாவனையாளர்கள்: 4.074 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2006): மொத்தம் 4,043 கி.மீற்றர். **பெருந் தெருக்கள்:** மொத்தம் 92.513 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2007): 1,577 கி.மீற்றர். **சில துறைகளும் துறைமுகங்களும்:** பெர்கன், ட்ரம்மன், ஃப்ளோரோ, ஹம்மர் ஃபெஸ்ட், கிறிஸ்டியன் சேன்ட், லோவிக், நோவிக், ஒஸ்லோ. **விமான நிலையங்கள்** (2007): 98.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 3%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** பார்லி, கோதுமை, கிழங்குவகைகள், பன்றி இறைச்சி, மாட்டிறைச்சி, பால், மீன். **கைத்தொழில்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, உணவுப்பொருட்கள் உற்பத்தி, கடதாசி உற்பத்திகள், உலோகங்கள், பெறுமதிமிகு மரங்கள், புடவை, மீன்பிடிக் கைத்தொழில். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, உலோகங்கள், மீன்கள், மரங்கள், நீர்மின் வலு. **ஏற்றுமதிகள்** (2009): பெற்றோலியமும் பெற்றோலிய உற்பத்திகளும், உலோகங்கள், மீன்கள். **இறக்குமதிகள்** (2009): இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், ரசாயனப்பொருட்கள், உணவு உற்பத்திகள். **பிரதான வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஐக்கிய ராச்சியம், ஜேர்மனி, நெதர்லாந்து, பிரான்ஸ், சுவீடன், ஐக்கிய அமெரிக்கா, டென்மார்க், சீனா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

✱ Viking Ship நூதனசாலை ✱ Vigeland பூங்கா ✱ The Geiranger Fjord ✱ Holmenkollen Ski Jump.


Viking Ship நூதனசாலை


Holmenkollen Ski Jump

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10 வகையான ஈரூடகவாழிகள் கண்டுபிடிப்பு!

தென் அமெரிக்கக் கண்டத்தில் உள்ள கொலம்பியாவில் அடர்ந்த காடொன்றில் அண்மையில் புதிய வகையான ஈரூடகவாழிகள் ஒன்றல்ல; இரண்டல்ல; 10 வகையானவையை விலங்கின விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். விலங்கின உலகிற்கு இப்பத்து வகையான புதிய ஈரூடகவாழிகளைக் கண்டுபிடித்த வனாந்தரமானது, கொலம்பியா நாட்டிற்கும் பனாமா நாட்டிற்கும் இடையிலான எல்லைக்கு அருகில் அமைந்திருக்கும் 'டெரியன் கெப்' என அழைக்கப்படும் பாரிய பள்ளத்தாக்கில் உள்ளது. இப்பள்ளத்தாக்கு கொலம்பியா நாட்டின் வடமேற்கே அமைந்துள்ள 'டக்காருணா' மலைச்சரிவின் அருகில் அமைந்துள்ளது. இந்தக் காட்டுப் பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளச்சென்ற விலங்கின விஞ்ஞானிகள் குழுவினர் ஈரூடகவாழிகள் 60, ஊர்வன 20 மற்றும் பறவைகள் 120 என கண்டுபிடிக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்றனர். இவ்வுயிரினங்களில் பெரும்பாலானவை இப்பிரதேசத்திற்கு மாத்திரம் உரித்தானவை என விலங்கின விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்தனர்.

''எவ்வித ஐயமுமில்லை. உண்மையில் இவ்வலயம் நோவாவின் கப்பலைப் போன்றதாகும். ஒன்றிலிருந்து மற்றொன்று மாறுபட்டு ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத அபூர்வமான உயிரினங்கள் பல இங்கு வாழ்கின்றன'' என சர்வதேச மிருகப் பராமரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த ஹோசே வின்சன்ட் ரொட்ரிகஸ் கூறினார். உலகெங்கும் உள்ள காடுகளில் ஒரு காலத்தில் வாழ்ந்து இப்போது அழிந்துவிட்ட மற்றும் அழிவை எதிர்நோக்கியிருக்கும் உயிரினங்கள் குறித்து நாம் அனைவரும் மிகவும் துயரத்துடன் இருக்கின்றோம். எனினும், இந்தப் புதிய கண்டுபிடிப்பானது, புதிய எதிர்பார்ப்புகளை எம்மிடம் தோற்றுவித்துள்ளது என ரொட்ரிகஸ் மேலும் விபரித்தார்.

உயிரினங்களைத் தேடி தேடுதல்களை மேற்கொண்ட ஆய்வுக்குழுவுடன் சர்வதேச மிருக பராமரிப்பு நிறுவனத்தின் ஈரூடகவாழி மற்றும் ஊர்வன குறித்து ஆராயும் நிபுணர் குழுவொன்றும் இணைந்துகொண்டது. இப்புதிய ஈரூடகவாழிகளிடையே தனித்துவமாக காட்சியளிப்பது உடல் பளபளப்பான கண்ணாடித் தவளை வகைகள் மூன்றும் ஹலிக்வின் தவளை வகைகள் மற்றும் மழைத்தவளை வகைகள் இரண்டும் சலமந்தர் வகைகள் பலவும் ஆகும். இயற்கைச் சூழல் மிகவும் ஆரோக்கியம் நிறைந்தது என்பதற்கு சிறந்த சான்றாக இப்பிரதேசத்தில் வாழும் ஈரூடகவாழியின் அதிக விகிதாசாரம் உள்ளது. ஈரூடகவாழிகளின் விகிதம் மிகவும் குறைந்து காணப்பட்டால், அப்பிரதேச சூழல் மாசடைந்துவிட்டது என்பது உறுதி என உயிரின விஞ்ஞானிகள் உறுதியாகத் தெரிவிக்கின்றனர்.

மேலதிகமாக அழிந்துவிட்டது என கருதிய டெபீர் எனும் மிருகமொன்றும் விசேட வகையான குரங்கு வகைகள் பலவும் காடுகளில் நடமாடியதாகவும் அதனை தாங்கள் கண்டதாகவும் ஆய்வுக் குழுவினர் மிகவும் பெருமையுடன் கூறுகின்றனர்.

(-அ)





ஆய்வுகளை மேற்கொள்ளச்சென்ற விலங்கின விஞ்ஞானிகள் குழு



# மனிதனும் நாயும்

## 30,000 வருடங்கள் பழமை வாய்ந்த நட்பு

மனிதனுக்கும் நாய்க்கும் இடையிலான இதயபூர்வமான தொடர்பு சுமார் 30,000 வருடங்களைவிட, தொன்மையானது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சேர்பியாவிலும் பெல்ஜியத்திலும் கண்டெடுக்கப்பட்ட 30,000 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த நாய்களின் இரண்டு மண்டை ஓடுகளை பரீட்சித்துப் பார்த்த விஞ்ஞானிகள் குழுவொன்று இந்த முடிவுக்கு வந்துள்ளது.







செம்மறியாடுகள், மாடுகள் மற்றும் ஆடுகள் போன்ற வீடுகளில் வளர்க்கப்படும் மிருகங்களை விட, வெகுகாலத்திற்கு முன்பிருந்தே நாய்கள் மனிதனுக்கு வசப்பட்டு, அடங்கி வாழ்ந்ததாகவும் இக் குழுவினரின் ஆய்வின் முடிவில் தெரியவந்துள்ளது.

மிருகங்களை வேட்டையாடுவதற்கு வசதியாகவே, ஓநாய்கள் போன்ற மனிதனுக்கு அடங்காத கொடிய மிருகங்களின் நீண்ட முக அமைப்பு மற்றும் தாடை எலும்புகள் மிகவும் ஒடுங்கி நீண்டு காணப்படுகின்றன.

எனினும், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட நாய்களின் இரண்டு மண்டையோடுகளின் முக அமைப்பு சிறியதாகவும் தாடைகள் அகலமாகவும் அமைந்திருந்தமையால், அவை மனிதனுக்கு அடங்கிவாழும் இரு மிருகங்களுக்குரியது என அரிசோனா பல்கலைக்கழக ஆய்வுக்குழுவினரால் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தற்கால மனிதனாகிலும் சரி, ஆதிகால நமது மூதாதையினரும் சரி பாதுகாப்புக் கருதியும் நட்புக்காகவும் நாய்களை வளர்த்ததாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆய்வாளர்களின் எண்ணப்படி, மிருகங்களின் இறைச்சி, பால் மற்றும் அவற்றின் தோலைப் பெற்றுக்கொள்வதற்காக விவசாயப் பண்ணைகளில் மிருகங்களை வசப்படுத்தி வளர்த்தனர்.

சைபீரியாவிலும் பெல்ஜியத்திலும் கண்டுபிடிக்கப்பட்ட நாய்களின் மண்டையோடுகள் இரண்டினதும் காலத்தைக் கணிப்பதற்காக, அவற்றை காபன் பரிசோதனைக்கும் அவற்றின் தோற்றத்தைத் தீர்மானிப்பதற்காக, எலும்புகளை சோதித்ததோடு, இம்மிருகங்கள் இரண்டும் வேட்டை நாய்கள் அல்ல; மிகவும் சாதுவான நன்கு பழக்கக்கூடிய நாய்கள் என்பதையும் கண்டுபிடித்துள்ளனர்.

(-அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் -1 (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: .................................. நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

27) இலங்கை, மேல்மாகாணம், கொழும்பு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் 'C' இனால் காட்டப்படுவது;




1. மேல் மாகாணம்
2. இலங்கை
3. கொழும்பு

★ *28 ஆம், 29 ஆம் வினாக்களில் உள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையின்கீழ்க் கோடிடுக.*

28) 1. கிளி, மைனா, புறா, கொக்கு 2. கட்டில், தளபாடம், மேசை, கதிரை
3. வெண்டி, கரட், கோவா, தக்காளி

29) 1. கறுப்பு, வெள்ளை, நிறம், சிவப்பு
2. கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை
3. காற்பந்தாட்டம், ஹொக்கி, கரப்பந்தாட்டம், கிரிக்கெட்

★ *பந்தியை வாசித்து 30 ஆம், 31 ஆம் வினாக்களுக்கு விடை தருக.*

| |
|---|
| மாமா எங்களுக்கு பந்துகள் வாங்கி வந்தார். நான் சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிறப்பந்துகளையும் எனது சகோதரன் நீலம், பச்சை, வெள்ளை ஆகிய நிறப்பந்துகளையும் எனது சகோதரி ஊதா, நீலம், பச்சை ஆகிய பந்துகளையும் எடுத்துக்கொண்டோம். |

30) நாங்கள் மூவரும் பெற்ற நிறப்பந்துகள் யாவை?
1. ஊதாவும் நீலமும் 2. சிவப்பும் பச்சையும் 3. நீலமும் பச்சையும்

31) சகோதரி மாத்திரம் பெற்ற நிறப்பந்து எது?
1. வெள்ளை 2. ஊதா 3. சிவப்பு

★ *பின்வரும் சொற்களை வாசித்து, அதற்கேற்ப 32 ஆம், 33 ஆம் வினாக்களுக்கு விடை தருக.*


சத்தம் தொடர்ந்து போட்டிடுமே!
நித்தம் --#-- காட்டிடுமே!
தத்தித் தத்திச் -Δ-
தண்ணீர் என்றால் ஒன்றிடுமே!

32) # என்ற குறியீடு உள்ள இடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவுசெய்க.
1. அறையில் 2. வெளியில் 3. நீரில்

33) Δ என்ற குறியீடு உள்ள இடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவுசெய்க.
1. பறந்திடுமே 2. ஓடிடுமே 3. சென்றிடுமே

★ *34 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.*

★ A, B, C, D, E, F என்றவாறு முகங்களில் குறிக்கப்பட்டுள்ள தாயக்கட்டை ஒன்று வைக்கப்பட்டுள்ள பல்வேறு முறைகள் வருமாறு;





34) B முகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து எது?

35) A முகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து எது?




36) இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள வடிவம் யாது?

..................................



★ *37ஆம், 38 ஆம், 39 ஆம் வினாக்களில் விவரங்களினால் குறிக்கப்படும் சொற்களை எழுதுக.*


37) இது மூன்று எழுத்துக்களைக்கொண்ட ஒரு சொல்லாகும். முதலெழுத்து அவலில் உண்டு; அயலில் இல்லை. இரண்டாம் எழுத்து கரத்தில் உண்டு; களத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து கும்பியில் உண்டு; குடுமியில் இல்லை.

..................................................................

38) இது வீட்டுப் பாவனைப்பொருள். முதல் எழுத்து கண்ணில் உண்டு; காதில் இல்லை.
இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு; இருபதில் இல்லை.
மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு; செவ்வாயில் இல்லை. ..............................

39) 'அ' என்பவர் 'ஆ' வின் தாய் ஆவார்.
ஆனால், 'ஆ' என்பவர் 'அ'வின் மகள் அல்ல.
அப்படியாயின் 'ஆ' யார்? ..................................................

40) தரப்பட்டுள்ள உருவை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது? ..................................................




### வினாத்தாள் -I இற்கான விடைகள்

*(மார்ச் 14,21 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

| | | | |
|---|---|---|---|
| 01) 1 | 11) 2 | 21) 3 | 31) 2 |
| 02) 2 | 12) 3 | 22) 2 | 32) 2 |
| 03) 2 | 13) 1 | 23) 3 | 33) 3 |
| 04) 3 | 14) 2 | 24) 2 | 34) ஊ |
| 05) 1 | 15) 2 | 25) 2 | 35) உ |
| 06) 2 | 16) 3 | 26) 1 | 36) ⊠ |
| 07) 2 | 17) 2 | 27) 2 | 37) வரம் |
| 08) 2 | 18) 3 | 28) 2 | 38) கத்தி |
| 09) 3 | 19) 2 | 29) 1 | 39) மகன் |
| 10) 1 | 20) 3 | 30) 3 | 40) 34 |

# மட்பாண்ட வரலாறு





மட்பாண்டங்கள் ஆரம்பகாலத்தில் கையாலேயே செய்யப்பட்டன. பின்னர்தான் சக்கரத்தின் மூலம் மட்பாண்டங்களைத் தயாரிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தவகையில், மட்பாண்ட உற்பத்தி வரலாறானது, கி.மு. 3000 ஆம் ஆண்டுவரை பின்னோக்கிச் செல்கின்றது. இக்காலப் பகுதியில் மெசொபதேமிய நாகரிகத்திற்கு உட்பட்ட தொகுதிகளான சுமேரியா, பெபிலோன் மற்றும் கிழக்குப் பகுதிகளிலேயே மட்பாண்டம் செய்யும் சக்கரம் அறிமுகப்படுத்தப்பட்டு மட்பாண்டங்கள் தயாரிக்கப்பட்டு வந்துள்ளன.

இந்த சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டதால், பிற்காலத்தில் மட்பாண்டத் தொழில் உலகளவில் பரவி வளர்ச்சி பெற்றது. இதனைத் தொடர்ந்து உணவு தயாரிப்பு, உணவு சேமித்து வைத்தல் மற்றும் பரிமாறல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்காக மட்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், உணவு மற்றும் பிற பொருட்களைப் பெறுவதற்காக, மட்பாண்டங்கள் பண்டமாற்று முறையில் வழங்கப்பட்டுள்ளன. தவிர, பணத்துக்காகவும் விற்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோயை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்போம்!

பண்டைய காலங்களில் காசநோய் உலகை ஆட்டிப் படைத்த நோயாக விளங்கியது. உரிய சிகிச்சை முறைகள் கண்டுபிடிக்கப்படாமையே இதற்குரிய காரணமாகும். காலப்போக்கில் மருத்துவ விஞ்ஞானத்தின் வேகமான வளர்ச்சியின் காரணமாக, காசநோய்க்கான சிகிச்சை முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனால், இந்த நோயை தற்போது முற்றாகக் குணப்படுத்தக்கூடியதாக உள்ளது.எனினும், தற்காலத்திலும் காசநோய் தொற்றக்கூடியதாக இருப்பினும் தொடர்ச்சியான சிகிச்சைகளினாலும் சுகாதாரமான பழக்க வழக்கங்களினாலும் இந்நோயின் தாக்கத்தை இலகுவில் கட்டுப்படுத்திவிடலாம்




**மார்ச் 24 ஆம் திகதி உலக காசநோய் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனையொட்டிய சிறப்புக் கட்டுரை இங்கு வழங்கப்படுகின்றது**

## காசநோயின் வரலாறு

முன்னைய காலத்தில் காசநோய் எவ்வாறு ஏற்படுகின்றது?, அதற்கான சிகிச்சைகள் என்ன? என்பன குறித்து அறியாததினால், காசநோயாளிகள் உயிர்வாழ்வது குறித்து நம்பிக்கை இழந்திருந்தனர். இந்நோய் மிக விரைவாகத் தொற்றும் தன்மை உள்ளதால், அன்று நோயாளிகளை சமூகத்தில் இருந்து ஒதுக்கியே வைத்திருந்தனர். காசநோயாளி இருந்த வீடுகளுக்கு செல்லக்கூட அன்று மக்கள் பயந்தனர். அக்காலகட்டத்தில், 'உடலை உருக்கும் நோய்', 'மோசமான தொற்று நோய்' என்று இந்நோயை மக்கள் பலவாறு அழைத்தனர். 1865 ஆம் ஆண்டில் யான் என்த்துமன் விலெமின் எனும் பிரான்சிய அறுவை சிகிச்சை நிபுணரால் காசநோய் ஒரு தொற்றுநோயாகும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதன் பின், றொபட் கொக் எனும் ஜேர்மன் விஞ்ஞானியே இந்நோயானது, ஒருவகை பக்றீரியாவால் ஏற்படுகின்றது எனக் கண்டுபிடித்தார். 'டியுபகல் பெசிலஸ்' (TB) என்று இதனை அவர் அழைத்தார். எனினும், இந்த பக்றீரியா கண்டுபிடிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளுக்கு பின்னரே, இந்த நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.



டியுபகல் பெசிலஸ் பக்றீரியா

## மருந்து கண்டுபிடிக்கப்பட்டமை

1943 இல் அமெரிக்க விஞ்ஞானியான சொலமன் வொக்ஸ்மன் என்பவர் 'டியுபகல் பெசிலஸ்' பக்றீரியாவை அழிக்கக்கூடிய மருந்தினைக் கண்டுபிடித்தார். இதுவே காசநோய்க்காகக் கண்டுபிடிக்கப்பட்ட முதல் மருந்தாகும். பின்னர் 1943-1952 வரையான காலப்பகுதியில் இதற்காக மேலும் இரண்டு வகை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதன் பின்பு காசநோய் முற்றாகக் குணப்படுத்தக்கூடிய நோயாகியது.

## நோய் பிடித்தல்

காசநோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் இருமும்போதும் தும்மும்போதும் வெளியேறும் எச்சிலினால் நோய்க் காவி பக்றீரியாக்கள் சூழலில் சேர்ந்துவிடுகின்றன.அவ்வாறு சூழலில் பரவி இருக்கும் இத்தகைய நோய்க் கிருமிகள், ஆரோக்கியமானவர்கள் சுவாசிக்கும்போது அவர்களைத் தொற்றிவிடுகின்றன. எனினும், எமது உடலில் இருக்கும் நோய் எதிர்ப்புச்சக்தி நோய்க்காவி பக்றீரியாவை அழித்து, நோய் ஏற்படாமல் தடுத்துவிடுகின்றது. இதற்கமைய, காசநோய்க் கிருமிகள் உடலில் உட்புகுந்தவர்களில் நூற்றுக்கு பத்து சதவீதமானவர்களுக்கே இந்த நோய் ஏற்படுகின்றது. பொதுவாக, எமது உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக இருந்தால், இந்த நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும்.

## நோய் அறிகுறிகள்

- மூன்று வாரங்களுக்கு மேலாகத் தொடரும் இருமல்
- சளியுடன் இரத்தம் வெளியேறல்
- மார்பு வலி
- உணவில் ஏற்படும் வெறுப்பு
- உடல் நிறை குறைதல்
- இரவில் காய்ச்சல் ஏற்படல் மற்றும் வியர்வை அதிகரித்தல்

இந்த அறிகுறிகள் தென்படுமாயின் உடனடியாக மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியமாகும். மார்பு சம்பந்தமான வைத்தியசாலைப் பிரிவுகளில் இந்த மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். இந்த பரிசோதனைகளின் ஊடாக, காசநோய் ஏற்பட்டுள்ளதா? என்பதனை அறிந்து கொள்ள முடியும்.

## சிகிச்சை முறைகள்

உரிய சிகிச்சைகளின் ஊடாக, காசநோயினை முழுமையாகக் குணப்படுத்த முடியும். ஆறு மாதங்களுக்கு தொடர்ச்சியாக மருந்துகளை உட்கொள்வது இதற்கு அவசியமாகும். மருந்துகளை உட்கொண்டு ஓரிரு வாரங்களில் குணம் காணப்படும் பட்சத்தில் தொடர்ச்சியாக மருந்துகளை உட்கொள்வதனை சிலர் தவிர்த்து வருகின்றனர். இதனால், நோய் தீவிரமடைந்து ஆபத்தான கட்டத்திற்கு இட்டுச் செல்லக்கூடியதாகவும் இருக்கும். தற்போதைய புதிய சிகிச்சைகளின்படி, காசநோய்க்கு உட்கொள்ளப்படும் மருந்துகளின் அளவும் குறைவாகவே காணப்படுகின்றது. அந்தவகையில், நான்கு வகை மருந்துகள் ஒரு மாத்திரையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த மருந்துகளின் அளவு நோயாளியின் நிறையினைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றன. சாதாரண நிறை உள்ள நோயாளிக்கு மூன்று மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. நோயாளி சிகிச்சையினைப் பெற்று இரண்டு, மூன்று வாரங்களுக்குப் பின்னர் வேறு நபர்களுக்கு நோய்த் தொற்று ஏற்படுதல் முற்றாகவே தவிர்க்கப்படுகின்றது.

## காசநோயை முற்றாக ஒழிக்க நீங்களும் உதவுங்கள்

- காசநோயாளிகளை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைப்பதனைத் தவிருங்கள்.
- காசநோய் பற்றி நீங்கள் அறிந்த விடயங்களை ஏனையவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.
- காசநோயாளிகள் தொடர்ச்சியாக மருந்துகளை உட்கொள்வது அவசியம் என்பதனை வலியுறுத்துங்கள்.
- இருமலின்போதும் தும்மலின்போதும் முகத்தினை மூடிக்கொள்ளுங்கள்.
- கண்ட இடங்களில் எச்சில் துப்புவதனைத் தவிருங்கள்.


உணவில் வெறுப்பு


மூன்று வாரங்களுக்கு மேற்பட்ட இருமல்


மார்பு வலி

- பிறந்த குழந்தைகளுக்கு பி.சி.ஜி தடுப்பூசியினை (காசநோய்த் தடுப்பூசி) வழங்குங்கள்.


## உங்களுக்குத் தெரியுமா?

- உலக சனத்தொகையில் மூன்றில் ஒருவருக்கு காசநோய் பக்றீரியா தொற்று உள்ளது.
- தொற்று ஏற்பட்டவர்களில் 10 சதவீதமானவர்கள் அவர்களின் வாழ்நாளில் காசநோயினால் பாதிக்கப்படுகின்றனர்.
- ஒவ்வொரு ஆண்டும் 8-10 மில்லியன் மக்கள் காசநோயாளிகளாகின்றனர்.
- காசநோயினால் வருடாந்தம் 2 மில்லியன் மக்கள் இறக்கின்றனர்.
- ஒவ்வொரு செக்கனுக்கும் ஒரு தடவை உலகில் ஒரு நபர் காசநோய்க்குரிய பக்றீரியாவினால் தொற்றுக்குள்ளாகின்றார்.
- நான்கு செக்கனுக்கும் ஒருவர் காசநோயினால் பீடிக்கப்படுகின்றார்.
- 15 செக்கன்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் உலகில் காசநோயி னால் பாதிக்கப்பட்டு இறக்கின்றார்.

(இ)


இரவில் ஏற்படும் காய்ச்சல்


உடல் நிறை குறைதல்


அதிக வியர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டைப் பா

*இலங்கையில் பாதுகாப்பான சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக, பலவிதமான நிறுவனங்களும் அரச திணைக்களங்களும் பல்வேறு பணிகளை ஆற்றிவருகின்றன. அத்தகைய நிறுவனங்களில் 'இலங்கை சுங்கத் திணைக்களம்' முக்கிய பணிகளை ஆற்றி வருகின்றது. எனவே, இத்திணைக்களத்தின் செயற்பாடுகள், அதிகாரங்கள், சமூகப் பாதுகாப்பு குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் என்பன பற்றி அறிந்துகொள்வோம்.*





## இலங்கையில் சுங்கத்தின் வரலாறு

உலகின் பண்டைய தொழில்களில் சுங்கமும் ஒன்றாகும். பண்டையகாலம் தொட்டு இலங்கையை ஆண்டு வந்த அரசர்கள், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் வளப்படுத்துவதற்காகவும் சில வரிகளை அறவிட்டுள்ளனர். அந்தவகையில், பண்டையகாலத்தில் துறைமுகங்களுக்கு வருகை தந்த கப்பல்களில் இருந்து சுங்கத்தினால் வரிகள் அறவிடப்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கின்றது. கி.பி.114-136 களில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'கொடவாய' என்ற கல்வெட்டில் இதுபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றையகால மொழிப்பிரயோகத்தின் அடிப்படையில் இதற்கு 'சுக' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிற்காலத்தில் இச்சொல் 'சுகபத்த' என்று மாறியுள்ளது. அவ்வாறே, கி.பி.321-297 காலப்பகுதியில் சந்திரகுப்த மன்னனின் புரோகிதர் பதவியினை வகித்த கௌடில்ய எனும் பண்டிதரால் எழுதப்பட்ட 'அர்த்த சாஸ்திரம்' என்ற நூலில் இலங்கையின் சுங்கப் பணிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன், மிகவும் பிரசித்தி பெற்ற 'பட்டுப்பாதை' என்ற கடல் மார்க்கத்தினூடாகப் பயணித்த பெரும்பாலான கப்பல்கள், எமது நாட்டில் நங்கூரமிடும்போது, அக்காலத்தில் வரி அறவிடுவதற்காக, நியமிக்கப்பட்டிருந்த 'மஹபுட்டுலத்தன்' என்றழைக்கப்பட்ட சுங்க அதிகாரிகள் வரி சேகரித்த விபரம் மன்னார் கச்சேரியிலுள்ள ஆவணம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கை சுங்கத் திணைக்களம்

இலங்கையில் இவ்வாறு ஆரம்பமான சுங்கப்பணிகள் 1809 இல் ஒரு திணைக்களத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு, சுங்கத் திணைக்களமாக உருவாகியது. இங்கு முதன்முறையாக சுங்கக் கட்டுப்பாட்டு நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. சுங்கத்தின் புதிய ஆரம்பம் 1869 இல் நிகழ்ந்துள்ளது. இதன்பின்னர், இது தொடர்பாக இருந்த பல்வேறு விதமான சட்டதிட்டங்கள் ஒன்றுபடுத்தப்பட்டு, 1869 இன் 17 ஆம் இலக்க சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. 2003 ஆம் ஆண்டு சுங்கச்சட்டத்தில் 48 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுங்க நிர்வாகத்தின் அனைத்துப் பணிகளும் இதனூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன.

## உலக சுங்க அமைப்பு

1952 இல் முதன்முதலாக 'சுங்க ஒத்துழைப்பு சபை' என்ற பெயரிலேயே இது ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக்கு இதன் உறுப்புரிமை 1965 ஆம் ஆண்டே கிடைத்துள்ளது. 1953 ஜனவரி 26 ஆம் திகதி பெல்ஜியத்தின் ப்ரசல்ஸ் நகரில் இதன் முதலாவது கூட்டம் நடைபெற்றது. இத்தினமே 'சர்வதேச சுங்க தினம்' என்று பிரகடனப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் நினைவு கூரப்படுகின்றது. இவ்வாறு ஆரம்பமான இந்த சபையானது, 1994 இல் 'உலக சுங்க அமைப்பு' (World Customs Organization) என்று அழைக்கப்படலாயிற்று. இந்த சர்வதேச அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் இலங்கைச் சுங்கம், நிர்வாகக் கட்டுப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் சுங்க சட்ட விதிகளைப் பின்பற்றுகின்றது.

## சுங்கத்தின் அதிகாரங்கள்

சுங்கப் பொருட்களை சோதனையிடல், வீடுகளை சோதனையிடல், நபர்களை, வாகனங்களை சோதனையிடல், நபர்கள் மற்றும் பொருட்களைக் கைப்பற்றுதலும் கைது செய்தலும், சுங்கத் தவறுகளை விசாரித்தல்-ஆராய்தல், பொருட்களை விடுவித்தல், பொருட்களை அரசுடமையாக்குதல், தண்டனை விதித்தல், அரசுடமையாக்கப்பட்ட பொருட்களை அழித்தல், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## சுங்கத் தவறுகள்


* தடை செய்யப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி, இறக்குமதி, மறைத்து எடுத்துசெல்லல், கொண்டுவரல்.
* வரையறுக்கப்பட்ட பொருட்களை எடுத்துச்செல்லல் மற்றும் கொண்டுவரல்.
* பொருட்களின் பெறுமதியினைக் குறைவாக மதிப்பிடுதலும் வெளியிடாதிருத்தலும்.
* திருட்டுப்பொருட்கள் விற்பனை.
* வரிச் சலுகைகளை தவறாகப் பயன்படுத்தல்.
* தவறான ஆவணங்களை சமர்ப்பித்தல்.

## சுங்கத் தவறுகளுக்காக வழங்கப்படும் தண்டனைகள்

தண்டனை விதித்தல், தண்டப் பணம் விதித்தல், சுங்க வசதிகளை ரத்துச்செய்தல், பொருட்களைக் கைப்பற்றுதல், பொருட்களின் பெறுமதிக்கு மும்மடங்காகத் தண்டப்பணம் விதித்தல், சிறைத்தண்டனை விதித்தல், பொருட்களை அழித்தல் ஆகிய தண்டனைகளை விதிக்க முடியும்.

## இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ள பொருட்கள்

போதைப்பொருள், அழுகிப் போன உணவுப்பொருட்கள், ஆயுதங்கள், பொய்யான வெளியீடுகளும் நூல்களும், நிபுணத்துவ சொத்துகளுக்கு எதிரான



பொருட்கள், தரமற்ற பொருட்கள், வேறு சட்டங்களினால் தடை செய்யப்பட்டுள்ள பொருட்கள்.

## இறக்குமதி, ஏற்றுமதி வரையறுக்கப்பட்ட பொருட்கள்

மூன்றரை வருடங்களுக்கு அதிகம் பழமை வாய்ந்த மோட்டார் வாகனங்கள், ஐந்து வருடங்கள் பழமையான வேன்கள், லொறிகள், பஸ்கள், மூன்று வருடங்களுக்கு மேல் பழமையான மோட்டார் சைக்கிள், மின்சாதனங்கள், பாவிக்கப்பட்ட குளிரூட்டிகள், பாவிக்கப்பட்ட டயர், தளபாடங்கள், இரண்டாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டுவரப்படும் வாகன உதிரிப்பாகங்கள், தாவர வகைகள், மருந்துப்பொருட்கள், வாசனைத்திரவியங்கள், உணவு வகைகள், வனவிலங்கு மற்றும் தாவரப்பகுதிகள், நாணயமாற்று சட்டவிதிகளுக்குப் புறம்பாகக் கொண்டு வரப்படும் பொருட் கள், அனுமதிப்பத்திரம் இன்றி இறக்குமதி செய்ய முடியாத பொருட்கள்.

## ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் அவசியப்படும் பண்டங்கள்

பவளப்பாறைகள், சிப்பி ஓடுகள், மரவகைகள், யானைத்தந்தம் மற்றும் யானைத் தந்தத்தினால் செய்யப்பட்ட பொருட்கள், பழைய மோட்டார் வாகனங்கள், தொல்பொருட்கள் (தொல்பொருளியல் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் தேவை), தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாகங்கள் (தாவர மற்றும் விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் அனுமதிப்பத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துகாக்கும் 'சுங்கம்'



தேவை) வளர்ப்பு மீன்கள் (மீன்பிடி அமைச்சின் அனுமதிப்பத்திரம் தேவை), மதுபானங்கள் (மதுவரி திணைக்கத்தின் அனுமதிப்பத்திரம் தேவை) பழமைவாய்ந்த ஆவணங்கள்,



கனிமவளங்கள், 19 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான பெறுமதி கொண்ட தேயிலை (தேயிலை கட்டுப்பாட்டு சபையின் அனுமதிப்பத்திரம் தேவை)

## இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய பொருட்கள்

நிறப் புகைப்படப் பிரதி இயந்திரம் (பாதுகாப்பு அமைச்சு), தொலைபேசி மற்றும் பெக்ஸ் இயந்திரம் (தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு), தாவரம் மற்றும் தாவரப்பகுதிகள், விலங்குகள் மற்றும் விலங்குகளின் பாகங்கள் (தாவரம் மற்றும் விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம்), வாசனைத்திரவியங்கள், மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் (வாசனைத்திரவியங்கள் மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரசபை), வாள், கத்தி, துப்பாக்கி (பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம்), தலைக்கவசம், மின்விசிறி, மின்அழுத்திகள் மற்றும் பால்மா வகைகள் (இலங்கை தரக் கட்டுப்பாட்டு சபையினதும் அணுசக்தி அதிகாரசபையினதும் அனுமதி).



## சுங்கத்தின் பணிகள்

* வரி சம்பந்தமான அரச கொள்கைகளை அமுல்படுத்தல்.

* தீர்வை வரிகளை மதிப்பிடலும் அவற்றை சேகரித்தலும்.

* வேறு அமைப்புகளுக்காக வரிகளை அறவிடல்.

* தீர்வை வரி விலக்கு அளித்தலும் நலன்களை அளித்தலும்.

* வரிகளை மீளச் செலுத்தலும் மீளப் பெற்றுக்கொள்ளுதலும்.

* கள்ளக்கடத்தல் வர்த்தகம், வர்த்தக ரீதியிலான ஊழல்கள், போதைப்பொருள் கடத்தல் என்பனவற்றினைத் தடுத்தல்.

* சுங்கத் தவறுகள் விசாரணை.

* குற்றவாளிகளுக்குத் தண்டனை விதித்தல்.

## சுங்கத்தின் நோக்கங்கள்

இலங்கையின் சுங்கப்பணிகள் நான்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை:

* வருமானத்தினை சேகரித்தல்.

* சட்டத்தினை அமுல்படுத்தல்.

* வர்த்தக வசதிகளை வழங்குதல்.

* சமூக நலத்திட்டங்கள்.

சுங்கத் திணைக்களம் இந்தப் பணிகளை பாரபட்சம் பாராது மேற்கொண்டு வருகின்றது.

## சுங்கத்தின் கட்டமைப்பு

* நிர்வாகப் பிரிவு.

* நிதிப் பிரிவு.

* கொள்கைத்திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு.

* மனித வள அபிவிருத்திப் பிரிவு.

* தானியங்கித் தரவுகள் தயாரிப்புப் பிரிவு.

* இறக்குமதி மற்றும் தீர்வை வரிப் பிரிவு.

* ஏற்றுமதிப் பிரிவு.

* பயணப்பொருட்கள் மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு.

* விலை நிர்ணயப் பிரிவு.

* விமானநிலையப் பிரிவு.

* விமானப் பொருட்கள் பிரிவு.

* மத்திய பொருள் ஆய்வுப் பிரிவு.

* நிவாரணப் பிரிவு.

* உற்பத்தி வரிப் பிரிவு.

## சுங்கத்தினால் அறவிடப்படும் பலதரப்பட்ட வரிகள்

தீர்வை வரி, மேலதிகக் கட்டணம், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, உற்பத்தி (விசேட ஒழுங்குகள்) வரி, செஸ் வரி, துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி, விசேட வணிக வரி என்பன அடங்கும். (-இ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டகச்சிவிங்கியின் கழுத்து நீளமாக இருப்பதேன்?



ஒட்டகச்சிவிங்கி, பிராணிகளிலேயே மிக உயரமானது. ஜிராஃப் (Giraffe) என்ற இதன் பெயர் அரேபிய வார்த்தைகளில் இருந்து வந்ததாகும். இவை நீண்ட சமநிலை உறுப்புக்களாக அமைந்துள்ளன. நீளமான கழுத்து உயரமான மரத்திலுள்ள இலைகளைக் கடித்துண்ணவும் உயரமான புல்லின் நடுவில் மறைந்து நின்று மற்றப் பிராணிகளைப் பார்ப்பதற்கும் உதவுகிறது. கழுத்துக்கு இணையாக உடலும் உயர்ந்து வளர்ந்துள்ளது. பரிணாமத்தின் தந்தையாகிய லமார்க்கின் கூற்றுப்படி, ஆரம்பத்தில் மரங்கள் குட்டையாக இருந்ததால், அவற்றுக்கு இணையாக இப்பிராணிகளும் குட்டையான கழுத்தைக் கொண்டிருந்தன. பின்னர் உயரமான மரத்திலுள்ள இலைகளைப் பறித்து உண்ணுவதற்காகக் கழுத்தை அடிக்கடி உயர்த்தின. அவரின் கூற்றுப்படி, உடலில் எந்த உறுப்பு அடிக்கடி பயன்படுத்தப்படுகிறதோ, அவ்வுறுப்பு சிறப்பாக வளர்ச்சிபெற்று காணப்படும்.

இவ்வாறு குட்டையான கழுத்தைக் கொண்ட மூதாதையர் பிராணிகள் அடிக்கடி மரக்கிளையினை நோக்கிக் கழுத்தை உயர்த்துவதால், கழுத்துப் படிப்படியாக உயர ஆரம்பித்து, இக் குணாதிசயத்திற்குரிய ஜீன்கள் அடுத்து வரும் சந்ததிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. உயரமான மரத்திலுள்ள இளந்தளிரைத் துண்டித்து உண்ணுவதற்காகவே, கழுத்தின் நீளம் அதிகரிக்கிறது. ஆனால், குட்டையான கழுத்துள்ளவை பசியினால் இறக்கின்றன. இவ்வமைப்பு ஏனைய பாலூட்டிகளில் காணப்படுவதில்லை.

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஒட்டமாவடி தேசிய பாட.,
ஒட்டமாவடி.

## தொழிற்சாலைகளும் அமைந்துள்ள இடங்களும்

| | |
|---|---|
| 01. தேயிலை ஆராய்ச்சி நிலையம் | - தலவாக்கலை |
| 02. தெங்கு ஆராய்ச்சி நிலையம் | - லுணுவில |
| 03. இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | - அகலவத்தை |
| 04. கனிப்பொருள் தொழிற்சாலை | - புல்மோட்டை |
| 05. ஒட்டுப்பலகைத் தொழிற்சாலை | - ஜின்தோட்டை |
| 06. உருக்கிரும்புத் தொழிற்சாலை | - ஒறுவெல |
| 07. டயர் தொழிற்சாலை | - களனி |
| 08. சீமெந்துத் தொழிற்சாலை | - காங்கேசன்துறை, காலி, புத்தளம் |
| 09. மட்பாண்ட தொழிற்சாலை | - பிலியந்தலை |
| 10. காகித ஆலை | - வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய |
| 11. புடவை ஆலைகள் | - பூகொடை, வியாங்கொடை, துல்கிரிய |
| 12. பால் பதனிடும் தொழிற்சாலை | - அம்பேவல |
| 13. எண்ணை சுத்திகரிப்பு நிலையம் | - சப்புகஸ்கந்த |
| 14. ஆயுர்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையம் | - நாவின்ன |

யூ.எல்.எஃப்.ஹிமாயா,
கிரி/சுலைமானியா மு.வித்.,
குரீகொடுவ.

# வாரிசு!



குரு ஒருவரிடம் கல்வி கற்க நான்கு சீடர்கள் வந்தனர். அந்நால்வரிடமும் குரு "உங்கள் வீட்டிலிருந்து ஒரே ஒரு செம்பு மட்டும் கொண்டு வாருங்கள். மற்ற உபயோகங்களுக்கு ஆசிரமப் பொருட்களையே உபயோகிக்கலாம்" என்றார்.

சில ஆண்டுகள் அவர்கள் அவரிடம் பயிற்சி பெற்றார்கள். அந்தக் குருவுக்கு முதுமைக்காலம் நெருங்கியது. தனக்குப் பின் ஆசிரமத்தைக் கவனித்துக்கொள்ள அந்த நால்வரில் யார் தகுதியானவர் என்று பரிசோதிக்க விரும்பினார்.

ஒருநாள் அவர்களை அழைத்து "நீங்கள் நால்வரும் இங்கே வந்து சேர்ந்தபோது, உங்கள் வீட்டிலிருந்து கொண்டுவந்த உங்களது செம்பை எடுத்து வாருங்கள்!" எனக் கட்டளையிட்டார்.

நால்வரில் மூவர் மட்டும் ஓடிப்போய் தங்கள் அறையில் இருந்த செம்பை எடுத்து வந்து குருவிடம் காட்டினர்.

நான்காமவன், "குருவே! நான் தங்களிடம் கல்வி கற்க வந்த சில நாட்களிலேயே 'எனது' என்ற எண்ணம் போய்விட்டதே! ஆகவே அதை எப்படி எடுத்துவர முடியும்?" என்று கேட்டான்.

பெருமகிழ்ச்சியடைந்த குரு அவனையே தனது வாரிசாக நியமித்தார்.

எம்.எம்.முஸ்தாக்,
அஸ்ஹர் கல்லூரி, அக்குறணை.





## செய்தித்தாள்களும் வெளிவரும் நாடுகளும்

| | |
|---|---|
| த டைம்ஸ் | இங்கிலாந்து |
| கார்டியன் | இங்கிலாந்து |
| நியூயோர்க் டைம்ஸ் | அமெரிக்கா |
| சிய சியா | குவைட் |
| வொஷிங்டன் போஸ்ட் | அமெரிக்கா |
| த ஹிந்து | இந்தியா |
| தினகரன் | இலங்கை |
| தினத்தந்தி | இந்தியா |
| அரேப் நியூஸ் | குவைட் |

எம்.எம்.நுஸ்ரத்,
புவக்பிட்டிய, கலேவெல.

## ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற இடங்கள்



| | | |
|---|---|---|
| 1896 | - | எதென்ஸ் |
| 1900 | - | பெரிஸ் |
| 1904 | - | சென்-லூயிஸ் |
| 1908 | - | லண்டன் |
| 1912 | - | ஸ்டொக்ஹோம் |
| 1916 | - | பேர்லின் |
| 1920 | - | அன்ட் வெப் |
| 1924 | - | பெரிஸ் |
| 1928 | - | அம்ஸ்டர்டாம் |
| 1932 | - | லொஸ் ஏன்ஜல்ஸ் |
| 1936 | - | பேர்லின் |
| 1940 | - | டோக்கியோ |
| 1944 | - | லண்டன் |
| 1948 | - | லண்டன் |
| 1952 | - | ஹெல்சிங்கி |
| 1956 | - | ஸ்டொக்ஹோம்/ மெல்பர்ன் |
| 1960 | - | ரோம் |
| 1964 | - | டோக்கியோ |
| 1968 | - | மெக்ஸிகோ |
| 1972 | - | மியூனிச் |
| 1976 | - | மொன்றியல் |
| 1980 | - | மொஸ்கோ |
| 1984 | - | லொஸ் ஏஞ்சல்ஸ் |
| 1988 | - | சியோல் |
| 1992 | - | ஃபர்சிலோனா |
| 1996 | - | அட்லாண்டா |
| 2000 | - | சிட்னி |
| 2004 | - | எதென்ஸ் |
| 2008 | - | பீஜிங் |
| 2012 | - | லண்டன் (நடைபெறவுள்ளது) |






ஜே.லஹீஸ் அஹமட்,
கமு/கமு/
அல்-மனார் ம.க.



## நல்ல நூல்களைப் படி!


நல்ல நல்ல நூல்களை
நாடிச் சென்று படித்திடுங்கள்!
நிதமும் படிக்கும் பழக்கத்தை
என்றும் நீங்கள் கடைப்பிடியுங்கள்!

நுட்பமான கருத்துப் பல
நூல்கள் நமக்கு சொல்லிடுமே!
நெடிய நட்பைத் தந்திடுமே
நேசம் தன்னை வளர்த்திடுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை உள்ளன? என்பதை இனங்கண்டு இணைக்க

2




## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக

3



## விஜய் வாசகர் மடல்



விஜய்யே! உன்னில் பிரசுரமாகின்ற சிறுகதைகளை நானும் எனது தம்பியும் விரும்பி வாசிக்கின்றோம். அவை சிறந்த படிப்பினைகளை ஊட்டுவதாக உள்ளன. அத்துடன், 'காடழிப்பினால் அழிந்து கொண்டிருக்கும் ஒராங்குட்டான்', 'வெள்ளித்திரைக்கு வந்த டின்டின்', 'வரலாற்றிலிருந்து', 'இராமாயணம்' என்பனவற்றையும் விரும்பி வாசித்தேன்.

**-காருண்யா செல்வரத்தினம், செங்கலடி.**

'இறந்த ஒருவரது இணைய சேவையை இன்னொருவர் பார்க்கலாம்' என்ற தகவலை வாசித்து ஆச்சரியமடைந்தேன். உன்னில் மேலும் கணினி மற்றும் தொழில்நுட்பத் தகவல்களை சேர்த்துக்கொள்ளும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**-எம்.பிரசாந்த், வைத்திய வீதி, தெஹிவளை.**



*'உலகப் புகழ்பெற்ற ஐரோப்பிய ஓவியர்கள்' எனும் ஆக்கம் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருந்தது. 'வெள்ளித் திரைக்கு வந்த டின்டின்' ஆக்கத்தை வாசித்து மகிழ்ந்தேன். நான் விரும்பிப் பார்க்கும் காட்டூன் தொடரென்றால், அது 'டின்டின்' தான். அது பற்றி அறியத்தந்தமைக்கு நன்றி. 'பூனைகளால் மூளைப்புற்றுநோய்' எனும் தகவலை வாசித்து அதிர்ச்சியடைந்தேன். செல்லப் பிராணிகளை வளர்ப்பவர்கள் இனிக் கவனமாக செயற்படுங்கள்!*

**-எம்.எஃப்.அஸீமா, குருநாகல் வீதி, சிலாபம்.**

'ஓராயன்' பற்றிய விண்வெளித் தகவல் அருமை. 'பூனைகளால் மூளைப் புற்றுநோய்' எனும் ஆக்கம் என்னை சிந்திக்க வைத்தது. 'இலங்கையின் முதலாவது பெண் நீதியரசர்', 'தொழில்நுட்பக் கழிவுகளால் உலகிற்கு அச்சுறுத்தல்', 'வெள்ளித்திரைக்கு வந்த டின்டின்' என்பனவற்றை விரும்பி வாசித்தேன். உலகெங்கும் உன் புகழ் பரவ வாழ்த்துகின்றேன்.

**-பதுறியா ஹமீத், கட்டுகஸ்தொட்ட.**

'ஆங்கிலம், சிங்களம் பாடப்பகுதிகள்' எனக்குப் பெரும் பயனளிக்கின்றன. சிங்களமே தெரியாமல் இருந்த என்னால் சிங்களமொழியைக் கொஞ்சம் விளங்கிக்கொள்ளவும் பேசவும் முடிகின்றது. உன்னில் பிரசுரமாகின்ற எல்லா ஆக்கங்களும் எல்லா வயது மட்டத்தினர்களும் பயன்பெறக்கூடியதாகவே அமைகின்றன.

**-வி.ஜெயக்குமார், கண்டி வீதி, திருகோணமலை.**



அன்புள்ள விஜய்யே! வாரம்தோறும் அழகான விடயங்களைச் சுமந்து வந்து மாணவர்களின் கல்வி அறிவினை உயர்த்துகின்றாய். உன்னில் எத்தனை சிறப்பம்சங்கள்! 'ஒல்லாந்தர் வரலாறு', 'இராமாயணம்' 'பாம்புலகின் புதுமை', 'நீதிக் கதைகள்', 'தெரிந்துகொள்ளுங்கள்', 'சிங்களம் பயில்வோம்', 'புலமைப்பரிசில் வினாத்தாள்', 'டின்டின்', 'விண்வெளித் தகவல்கள்' என்பவை எனக்குப் பிடித்தமானவை. விஜய்யே! நீதான் உலகின் தலைசிறந்த சிறப்பு கல்விப் பத்திரிகை! உனக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**-என்.ஜே.எம்.இமாத், டீ.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு.**

இந்த இதழில் (21.03.2012) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.03.2012.

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

## சரியான சொற்களை வைத்து திருக்குறள்களைப் பூர்த்தி செய்க

5

(செயல்/பண்புடைமை/நாண்உடைமை/ ஆற்றுவார்/ நடை/அன்புடைமை)

1. ............................ ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் ...................... என்னும் வழக்கு.
2. பெருமை உடையவர் ............................ ஆற்றின் அருமை உடைய ......................
3. அணியன்றோ .................... சான்றோர்க்கு அஃதுஇன்றேல் பிணியன்றோ பீடு ..................




தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.03.28ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


**அற்லஸ் அறிவுக்கு விருந்து 357**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## A. பிழை திருத்தி எழுதுக

4


1. கையெழுது - ..............................
2. ஆளோசணை - ..............................
3. நுறையீரள் - ..............................
4. புண்முருவல் - ..............................
5. ஏரத்தாள - ..............................

## B. இங்குள்ள எழுத்துக்களை வைத்து 10 சொற்களை அமைக்க




## இடைவெளிகளை நிரப்புக

1





## அறிவுக்கு விருந்து 354 விடைகள்

**போட்டி: 02**




**போட்டி: 03**



**போட்டி: 04**

1. மஞ்சரி
2. நாட்காட்டி
3. குடியரசு
4. மாம்பழம்
5. கோபுரம்

**போட்டி: 05**

1. கடல் -sea
2. நூதனசாலை-museum
3. ஒட்டகம் -camel
4. வேலி -fence
5. புல் -grass

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 354 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
கு. அருணோதயன், குட்செட் வீதி, தோணிக்கல்.

**போட்டி: 02**
ப.விக்னேஸ்வரன், நீராவியடி, யாழ்ப்பாணம்.

**போட்டி: 03**
புஸ்பராஜ், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**போட்டி: 04**
எஃப். நஸ்ரினா, கடற்கரை வீதி, காத்தான்குடி.

**போட்டி: 05**
எம். நவ்ஃபல், மானாம்பொடை, உக்குவளை.

**பாராட்டுப் பெறுவோர்:**

★ டி.ஷிஃபானா, மடிகே மிதியால.
★ என்.கௌதமன், பண்டத்தரிப்பு.
★ எம்.அல்தாப், களுத்துறை.
★ என்.மேகலா, இதல்கஸ்ஹின்ன.
★ ஆர்.சாமில், சிலாபம்.
★ ஏ.ஹிபா, எதுன்கஹகொடுவ.
★ ஷெலோமி ரொபர்ட், பலாங்கொடை.
★ சு.டிலுக்ஷன், புத்தளம்.
★ ஏ.முஹ்சிம், மருதமுனை.
★ எஃப்.நஸ்மா, தும்மலதெனிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



மாளிகாவத்தையைச் சேர்ந்த ஜேக்கப்-ராணி தம்பதியரின் செல்வப் புதல்வி கேசனி தில்ருக்சி, 20.03.2012 அன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் மாதாவின் ஆசி பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



பண்டாரவளை-சுமதுறுகம வைச் சேர்ந்த அஸ்லம்-ஹினாயா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா சம்ஹா, 19.03.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



வெள்ளம்பிட்டியைச் சேர்ந்த முர்ஷித்-ரஹ்மதுன் நிஷா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம். முஜாஹிட், 17.03.2012 அன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பாடசாலை மட்ட மீலாதுன் நபி தினப் போட்டியில் இஸ்லாமிய கீத போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட எம்.கே.ஆதில் அஹமட், தனக்குக் கிடைத்த பதக்கத்துடனும் சான்றிதழுடனும் நிற்பதைக் காணலாம். இவர், அக்கரைப்பற்று-01 ஐச் சேர்ந்த எம். காலித்-ஜனுசா தம்பதியரின் செல்வப் புதல்வராவார்.

## ஓவியம் வரைவோம் - 94

ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

### வெளிச்சுவர்

தாகபையைச் சுற்றிக் கட்டப்படும் வெளிச்சுவரானது, 'அத்பவுர' என்றும் அழைக்கப்படுகின்றது. இதை 'கைப் பிடிச் சுவர்' அல்லது 'யானை உருவங்கள்கொண்ட சுவர்' என்றும் கூறலாம். ஆரம்பகால தாதுகோபுர வெளிச்சுவர்களில் யானைகள் சிறப் பாக செதுக்கப்பட்டுள்ளதைக் காண லாம். அநுராதபுரத்திலுள்ள மகா போதியில் காணப்படும் அத்பவுர அழகாக உள்ளது.

### பேசாவலலு

தாதுகோபத்தைச் சுற்றிக் காணப்ப டும் 'காப்பு' போன்ற வட்ட வளையங்கள் 'பேசாவலலு' என அழைக்கப்படுகின்றன. இப்பகுதி மூன்று அடுக்கு வளையங்களாக தாதுகோபத்தைச் சுற்றிக் காணப்படுகின்றது.



### கஜன்மலுவ

தாதுகோபத்தின் வெளிச் சுவருக் கும் தாதுகோபத்தின் அடிப்பாகத் திற்கும் இடையே காணப்படும் பகுதி 'கஜன்மலுவ' ஆகும். வெளிப் புறச் சுவரை யானைகள் தாங்கி நிற்பதாலேயே, இப்பகுதி 'கஜன் மலுவ' என அழைக்கப்படுகின்றது.

### கர்ப்பகம்

தாகபையின் அமைப்பைக் காட்டு வதில் 'கர்ப்பகம்' பிரதான இடத்தைப் பெறுகின்றது. அதன் அமைப்புக் கேற்ப, தாதுகோபுரங்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. (உ+ம்: மணிவடிவம், நீர்க்குமிழி வடிவம் உட்பட இன்னும் பல வடிவங்கள்)

## கைவண்ணங்கள்




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.ராஹிம், மணல்தீவு றோ.க.த.வித்., மணல்தீவு.



எஃப்.லஸ்னா, அல்-கமர் ம.கல்., பம்மன்ன.



எஃப்.ஹில்மா, அல்-ஹுதா. மு.ம.வித்., ஏறுகந்தன.



ம.நிதர்சன், இந்துக் கல்லூரி, கொக்குவில்.



எஸ்.ஜனகன், விஸ்டம் சர்வதேச பாட., நீர்கொழும்பு.



அ.ரம்சாத், அல்-அக்ஷா கல்., கிண்ணியா.



எம்.நசீம், ஸாயா முஸ்லிம் ம.வித்., கடுகெலியாவ.



ஏ.ரம்சானியா, முஸ்லிம் ம.ம.வித்., நாச்சியாதீவு.



வ.ஸியானி, ஓர்து அன்னை றோ.க.வித்., திருகோணமலை.



எஃப்.வஸ்னா, ஸாஹிரா கல்லூரி, கம்பளை.



ஆநிசா சியாட், பாத்திமா பாலிகா ம.வித்., கெலிஓயா.



எம்.இனாஸ், ஜெய்லானி தே.பாட., பலாங்கொடை.



ஸீறத் பாத்திமா, அல்-ஹம்றா வித்., மருதமுனை.



அ. அபிலாந்தி, ஸ்ரீ இராமகிருஷ்ணா கல்., லுனுகலை.



எம்.ஆகில், ஜாமியுல் அஸ்ஹர் மத்.கல்., கண்டி.

### அன்பு தம்பி, தங்கைகளே!

'கைவண்ணங்கள்' பகுதிக்கு ஏராளமான ஓவியங்கள் கிடைத்தவண்ணமுள்ளன. அவற்றை தரங்கண்டு வரிசைக் கிரமமாகப் பிரசுரித்து வருகின் றோம். உங்கள் ஓவியங்களை வித்தியாசமான தலைப்புகளில் வரைந்து அனுப்புங்கள்.

நேர்த்தியாகவும் அழகாகவும் வரைந்தனுப்புபவர்களின் ஓவியங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள்.

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பின் மதிப்பு!

வெள்ளிமலை ஜமீன்தார் வீட்டுப் பொற்கொல்லன் நாராயணன். அவனது பாட்டனார், முப்பாட்டனர் காலத்திலிருந்து ஜமீன்தார் வீட்டு நகைகளையும், ஏனைய தங்கப் பாத்திரங்களையும் அவர்களே செய்து கொடுத்து வந்தனர்.

நாராயணன் மகன் ராமு அவன் தன் தந்தை செய்யும் தொழிலைக் கற்காமல், ஊர் சுற்றி வந்தான். தந்தை இறந்த பின்னர் ராமு வேலைக்குச் செல்லாமல், தன் முன்னோர் வைத்துவிட்டுப் போன சொத்தின் வருமானத்தில் வாழ்ந்தான்.

ஒருநாள் ஜமீன்தார் அழைத்து வரச் சொன்னதாக ராமுவிடம் ஒரு சேவகன் வந்து கூறினான். அவனும் சென்றான். ஜமீன்தார் அவனிடம் சில நகைகள் செய்யவேண்டும் எனக் கூறவே, தன் விரலில் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் அது ஆறியதும், செய்து தருவதாக சாக்குப் போக்கு சொல்லி விட்டு வந்தான். அதைக்கேள் வியுற்ற ராமுவின் தாய் தன் மகனிடம், "ராமு ஜமீன்தார் வீட்டு வேலையை விட்டால், நமக்கு வேறு கதி இல்லை. நீ எப்படியாவது அவர் சொல்லும் நகைகளை உன் தந்தையிடம் வேலை செய்தவர்களை வைத்துச் செய். அவர்களுக்குக் கூலி கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தை நாம் வைத்துக் கொள்ளலாம்" என்றார்.

இரண்டு நாள் கழித்து ராமு ஜமீன்தாரைக் கண்டு அவர் கூறும் நகைகளைச் செய்து கொடுப்பதாகக் கூறினான்.

அவரும் என்னென்ன நகைகள் செய்யவேண்டும் எனக்கூறி அவற்றிற்கு எவ்வளவு தங்கமும் ரத்தினக்கற்களும் தேவை எனச் சொல்லச் சொன்னார். ராமு கணக்குப் போட்டு மறுநாள் காலை விபரமாகச் சொல்வதாகக் கூறிச் சென்றான்.

ராமு தன் தந்தையிடம் வேலை செய்தவர்களை அழைத்து ஜமீன்தார் சொன்ன நகைகளை செய்து கொடுக்குமாறும், அதற்கு அவர்களுக்குக் கூலி கொடுப்பதாகவும் கூறினான். பிறகு அந்த நகைகளைச் செய்ய ஆகும் தங்கம், நவரத்தினங்கள் முதலியவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

மறுநாள் காலை ஜமீன்தாரைக் கண்டு விபரங்களைக் கூறி, அவரிடமிருந்து தங்கத்தையும், ரத்தினங்களையும் வாங்கிக்கொண்டான். அவரிடம் முன்பணம் எதுவும் வாங்கவில்லை. மேலும், நகைகளுக்கு மதிப்பிட்டதற்கு மேலே கொஞ்சம் தங்கம் போட வேண்டி வந்தது. அதையும் ராமு தன் இருப்பிலிருந்தே போட்டான். அவர்களும் நகைகளை செய்து கொடுத்தனர்.

ராமு நகைகளை எடுத்துப் போய் ஜமீன்தாரிடம் கொடுத்தான். ஜமீன்தாரும் அவற்றின் வேலைப்பாட்டைப் பாராட்டி பத்து பொற்காசுகள் ராமுவுக்குக் கொடுத்தார். உடனே அவன் திடுக்கிட்டான். ஏனெனில், கூலியாகவும் அதிகமான தங்கம் போட்ட வகையிலும் அவன் நூறு பொற்காசுகள் வரை செலவு செய்திருந்தான்.

ஜமீன்தாரும் ஓரக்கண்ணால் அவனைப் பார்த்து மனதிற்குள் சந்தோஷப்பட்டார். "இதோ பார். இன்னும் சில நகைகளைச் செய்யவேண்டும். இவற்றை நீ ஐந்து நாட்களில் செய்து கொடுக்க வேண்டும்" என்றார் ஜமீன்தார்.



ஜமீன்தார் தங்கத்தையும் நவரத்தினங்களையும் கொண்டுவரச் சொல்லி, அவற்றை ராமுவிடம் கொடுத்து, "இதற்கு எவ்வளவு தங்கம் வேண்டும் என்று உன்னை மதிப்பிடச் சொல்லி உனக்கு சிரமம் கொடுக்காமல் நானே கணக்கிட்டு விட்டேன்" என்றார் சிரித்தவாறே.

ராமு முன்போலவே, கூலியாட்களைக்கொண்டு நகைகளைச் செய்து ஐந்து நாட்களுக்குள் ஜமீன்தாரிடம் கொண்டுபோய்க் கொடுத்தான். அதற்கு அவனுடைய பணம் நூற்று ஐம்பது பொற்காசுகள் செலவாயிற்று. ஆனால், ஜமீன்தார் கூலியாகக் கொடுத்ததோ, பதினைந்து பொற்காசுகள் மட்டுமே! அடுத்த சில நாட்களுக்குப் பின் மீண்டும் ஜமீன்தார் ராமுவை வரவழைத்து, மேலும் சில நகைகளைச் செய்யச்சொல்லி அதற்கான தங்கத்தையும் நவரத்தினங்களையும் கொடுத்தார்.

ராமுவும் அவற்றை வாங்கிக் கொண்டு சோகத்துடன் வீட்டிற்குப் போனான். அவன் தன் தாயாரிடம் "இப்போது என்னம்மா செய்வது? ஒவ்வொரு தடவையும் நான் வேலைக்காரர்களுக்கு கூலி கொடுத்து நஷ்டப்பட்டுக்கொண்டே இருப்பதா?" என்றான்.

"வேண்டாம் கடந்த இருமுறைகளில் அந்த வேலையாட்களுடன் உட்கார்ந்து அவர்கள் நகைகளை எப்படிச் செய்கிறார்கள் என்பதை நன்கு கவனித்து வந்திருக்கிறாய். அதனால், நீயே யாருடைய உதவியும் இல்லாமல் இந்த நகைகளைச் செய். உன்னால் முடியும்" என்றார்.

ராமுவும் தன் தாய் சொல்வது சரி எனத் தோன்றவே, அவனே ஜமீன்தாரின் நகைகளைச் செய்யலானான். இரவும் பகலுமாகச் சிரத்தையுடன் அவற்றைச் செய்து முடித்து, எடுத்துக்கொண்டுபோய் ஜமீன்தாரிடம் கொடுக்கவே, அவரும் அவனது வேலைத்திறனைப் பாராட்டிவிட்டு இரண்டு பொற்காசுகளைக் கூலியாகக் கொடுத்தார்.

அதைக் கண்ட ராமுவுக்கு கோபம் கோபமாக வந்தது. "ஐயா! தங்களுக்கு உழைப்பின் மதிப்பு கொஞ்சமும் தெரியவில்லை. இந்த நகைகளைச் செய்ய நான் எவ்வளவு பாடுபட்டேன் தெரியுமா? இனிமேல் இம்மாதிரிக் குறைந்த கூலிக்கு வேலை செய்ய இயலாது என்னை விட்டுவிடுங்கள். வேறு எங்காவது போய் இந்தத் தொழிலைச் செய்து அதற்குரிய கூலியை பெற்று சுகமாக வாழ்கிறேன்" என்றான் படபடப்பாக.

"ஓ அப்படியானால் நீயே இந்த நகைகளை உன் கைப்படச் செய்ததாகச் சொல்கிறாயா?" என்று கேட்டார். அது கேட்டு ராமுவும் ஆச்சரியத்துடன் ஜமீன்தாரைப் பார்த்தான். அவர் ராமுவை தன் பக்கம் வரச்சொல்லி அவன் முதுகைத் தட்டிக்கொடுத்து, "சபாஷ்! கடந்த இரண்டு தடவைகளில் நான் கொடுத்த கூலி குறைவானது என்று கூறவில்லை. வேறு யாரையோ செய்யச் சொன்னாய். அதனால், அப்போது உனக்கு உழைப்பின் மதிப்புத் தெரியவில்லை. நான் கொடுத்ததையும் மறுபேச்சுப் பேசாமல்வாங்கிக் கொண்டு போனாய். ஆனால், இந்தத் தடவை நான் உனக்கு மிகக் குறைந்த கூலி கொடுத்தபோது, நீ உழைப்பின் மதிப்புப் பற்றிப் பேசியதால் இந்த நகைகளை நீயே உன் கைப்படச் செய்திருக்கிறாய் எனத் தெரிந்துகொண்டேன். நீ இவ்வளவு நாட்களாக உன் தொழிலைப் பற்றிக் கவலைப்படாமல் அலட்சியமாக இருந்தது பற்றி நான் கேள்விப்பட்டுத்தான் இப்படிச் செய்தேன். இப்போது உனக்கு உழைப்பின் மதிப்புத் தெரிந்துவிட்டது. நீ வேறு எங்கும் போக வேண்டாம். இங்கேயே அக்கறையுடன் உன் தொழிலைச் செய்து வா" என்று அறிவுரை கூறி அவனுக்கு ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்தார். உழைப்பின் மதிப்பை அறியச் செய்த ஜமீன்தாரை வணங்கி அன்றுடன் திருந்தினான் ராமு.



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று படுசோம்பேறியாக இருந்தது. ஒருநாள் அதற்கு நன்றாகப் பசியெடுத்தது. அப்பொழுது அதன் எதிரே ஒரு நரி வந்தது. அதை வழிமறித்து, "என் பசி தீர்க்க வந்த நரியாரே, வாரும்" என்றது.

பயந்துபோன நரி தந்திரமாக "சிங்க மகாராஜா, நானோ சிறிய விலங்கு. என்னை நீங்கள் கொன்று தின்றால், உங்களின் கால் வயிற்றுப் பசிகூட அடங்காது. என்னை நீங்கள் உயிரோடு விட்டால், உங்களுக்கு நான் ஓர் உபகாரம் செய்வேன்" என்றது.

"என்ன செய்வாய், சொல்?" என்று கர்ஜித்தது, சிங்கம்.

"காட்டின் அரசே! அனைவரும் என்னைத் தந்திரக்காரன் என்று சொல்வது தங்களுக்குத் தெரியும். எனக்கு நீங்கள் உயிர்ப்பிச்சை அளித்தால், நான் தந்திரம் செய்து ஒரு மானையோ, கழுதையையோ உங்கள் பசியாறக்கொண்டு வருகிறேன்" என்று தந்திரவலை விரித்தது நரி.

"உண்மையாகச் சொல்கிறாயா"? என்று கேட்டு, நரியின்

# உயிர் காத்த உத்தமன்

வலையில் விழுந்தது, சிங்கம்.

"சத்தியமாக மகாராஜா... என்னை நம்புங்கள். எனக்கு உயிர் கொடுத்த உங்களுக்கு நான் உதவாமல் இருப்பேனா? சற்றுத் தொலைவில்தான் நீர்வீழ்ச்சி உள்ளது. அனைத்து விலங்குகளும் நீர் அருந்த இந்த வழியாகத்தான் போகவேண்டும். நான் ஏதாவதொரு, பெரிய விலங்கிடம் இந்த இடத்திலே ஒரு தேன் தடாகம் உள்ளது, அதில் உள்ள நீர் தித்திக்கிறது என்று பொய் சொல்லி, ஏமாற்றி, இங்கு அழைத்து வருகிறேன். நீங்கள் மறைந்திருந்து அதைத் தாக்கிக், கொன்று பசியாறிக் கொள்ளுங்கள்" என்று நரி யோசனை சொன்னது, அதன் பேச்சில், சிங்கத்திற்கு நம்பிக்கை வந்தது.

"நரியாரே.... நீர் சொன்னபடி, செய்ய வேண்டும்" என்று கண்டிப்புடன் கூறியது சிங்கம்.

"நிச்சயமாக, செய்கிறேன் மகாராஜா. ஆனால், நீங்கள் நான் சொன்னபடி, செய்தாக வேண்டுமே" என்று பணிவுடன் சொன்னது, நரி.

"என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டது, சிங்கம்.

"மகாராஜா... நான் உங்கள் இரையை இதே இடத்திற்குக் கூட்டி வரும்வரை, நீங்கள் வேறு எந்த இடத்திற்கும் போய்விடக்கூடாது. எவ்வளவு நேரம் ஆனாலும், நீங்கள் இந்த இடத்தை விட்டு நகரவே கூடாது. ஏனென்றால், நான் கூட்டி வரும் போது, நீங்கள் இல்லாமல் போய்விட்டால், நீங்களும் ஏமாந்து போவீர்கள். உங்களின் இரையும் உங்களிடம் இருந்து தப்பித்துவிடும்" என்றது நரி.

"சரி, கொண்டு வருகிறேன்... மகாராஜா" என்று கூழைக் கும்பிடு போட்டு தான் உயிர் பிழைத்த சந்தோஷத்தில் ஓடியது நரி. ஓடிப்போன நரிக்கு மனதில் திடீர் என்று ஞானோதயம் வந்தது. தன் உயிரைப் போலவே பிற உயிர்களையும் காப்பாற்ற வேண்டுமென்று எண்ணியது. அதனால், ஓர் இடத்தில் அமர்ந்து, அந்த வழியாக நீர் அருந்த வருகின்ற விலங்குகளிடம் எல்லாம், "சிங்கம் அங்கே பசியோடு படுத்துக்கொண்டிருக்கிறது. இந்த வழியாகப் போய்விடுங்கள். உயிரைக் காத்துக்கொள்ளுங்கள். வேறு இடத்தில் போய் நீர் அருந்திக்கொள்ளுங்கள்" என்று சொல்லி அந்த வழியாகப் போகும் விலங்குகள் அனைத்தையும் திசை திருப்பி அனுப்பியது.

"உயிர் காத்த உத்தமரே, உமக்கு என் நன்றி" என்று ஒவ்வொரு விலங்கும் நரிக்கு நன்றி சொல்லி வணக்கம் போட்டு விட்டுச் சென்றன. அங்கே, சிங்கமோ, நரியை எதிர்பார்த்து ஏமாந்த விரக்தியில் தனக்குத் தானே, 'காலையில் இருந்து மாலை வரை எந்த விலங்குமே, இந்த வழியாக நீர் அருந்த வரவில்லையே! நரியின் பேச்சைக் கேட்டு, உண்மை என்று நம்பி மோசம் போய் விட்டேனே!" என்று புலம்பிக் கொண்டே இரையைத் தேடிச்சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்**

දුව: මිස්, ඉස්කෝලෙන් ළමයෙක් ගෙනාවා. එයා කොහේද ඉන්නේ?
மிஸ், இஸ்கோலென் லமயெக் கெனாவா. எயா கொஹேத இன்னே?
மகள்: மிஸ், பாடசாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட சிறுவன் எங்கே இருக்கின்றான்?

නර්ස්: අර අතන කාමරයේ ඉන්නවා.
அர அதன காமரயே இன்னவா.
தாதி: அதோ, அந்த அறையில் இருக்கின்றான்.

දුව: අම්මා එන්න, අර කාමරයේ ඉන්නවලු.
அம்மே என்ன, அர காமரயே இன்னவலு.
மகள்: அம்மா வாருங்கள், அதோ அந்த அறையில் இருக்கின்றானாம்.

අම්මා: පුතාට කොහොමද ඩොක්ටර්?
புதாட்ட கொஹொமத டொக்டர்?
அம்மா: மகனுக்கு எப்படி டொக்டர்?

දොස්තර: බයවෙන්න එපා. අපි තුවාලයට බෙහෙත් දැම්මා. මැහුම් තුනක් දැම්මා.
பயவென்ன எபா. அப்பி துவாலயட்ட பெஹெத் தெம்மா.
மெஹும் துனக் தெம்மா.
வைத்தியர்: பயப்பட வேண்டாம். நாங்கள் காயத்திற்கு மருந்து போட்டோம். மூன்று தையலும் போட்டோம்.

දුව: මල්ලි තුවාලය රිදෙනවාද?
மல்லி துவாலய ரிதெனவாத?
மகள் காயம் வலிக்கின்றதா தம்பி?

මල්ලි: ඔව් අක්කේ.. හරියට රිදෙනවා.
ஒவ் அக்கே... ஹரியட்ட ரிதெனவா.
தம்பி: ஆம் அக்கா... மிகவும் வலிக்கிறது.

දුව: බයවෙන්න එපා මල්ලි. ඉක්මණට සනීපවෙයි.
பயவென்ன எபா மல்லி. இக்மணட்ட சனீபவெய்.
மகள்: பயப்பட வேண்டாம் தம்பி. விரைவில் குணமாகும்.

අම්මා: ඩොක්ටර්, අපට පුතාව ගෙදර ගෙනියන්න පුළුවන්ද?
டொக்டர், அபட்ட புதாவ கெதற கெனியன்ன புலுவன்த?
அம்மா: டொக்டர், எமக்கு மகனை வீட்டுக்குக்கொண்டு போகலாமா?

දොස්තර: තව පැය භාගයකින් එක්කගෙන යන්න.
தவ பெய பாகயகின் எக்ககென யன்ன.
வைத்தியர்: இன்னும் அரைமணி நேரத்தில் கூட்டிக்கொண்டு போங்கள்.

දවසක් ඇර දවසක් ඇවිත් බෙහෙත් දාන්න.
தவசக் எற தவசக் எவித் பெஹெத் தான்ன.
ஒருநாள் விட்டு ஒருநாள் வந்து மருந்து போட்டுக்கொள்ளுங்கள்.

සතියකින් ඇවිත් මැහුම් කපන්න පුළුවන්.
சதியகின் எவித் மெஹும் கபன்ன புலுவன்.
ஒரு வாரத்தில் வந்து தையலை வெட்டலாம்.

අම්මා: හොඳමයි ඩොක්ටර්. ස්තූතියි.
ஹொந்தமய் டொக்டர். ஸ்தூதிய்.
அம்மா: நல்லது டொக்டர். நன்றி.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. அந்த அறையில் இருக்கின்றார்.
..................................................................................

ii. காயத்திற்கு மருந்து போட்டோம்.
..................................................................................

iii. விரைவில் குணமாகும்.
..................................................................................






'**Wherever**', '**Whenever**' மற்றும் **Whatever** முதலான இணைக்கும் சொற்களை (Joining Words) கையாண்டு ஒன்றிணைக்கப்பட்ட கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) மேலும் இங்கே பயில்வோம்.

(அ) நீ விரும்புகின்ற எவ்விடத்திலாவது, உன்னால் உட்கார முடியும்.
You can sit wherever you like.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* நீ விரும்புகின்ற எவ்விடத்திலாவது,
Wherever you like,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* உன்னால் உட்கார முடியும்.
You can sit.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஆ) உனக்கு உதவி தேவையான பொழுதெல்லாம், நான் உனக்கு உதவுவேன்.
Whenever you need help, I will help you.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* உனக்கு உதவி தேவையான பொழுதெல்லாம்,
Whenever you need help,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* நான் உனக்கு உதவுவேன்.
I will help you.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(இ) உனக்கு ஏதேனும் தேவையெனில், உன்னால் அவற்றை இங்கே வாங்க முடியும்.
Whatever you want, you can buy them here.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

* உனக்கு ஏதேனும் தேவையெனில்,
Whatever you want,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* உன்னால் அவற்றை இங்கே வாங்க முடியும்.
You can buy them here.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஈ) நீ எங்கே போகின்றாயோ, நான் உன்னைப் பின்தொடருவேன்.
I will follow you wherever you go.
(கலப்பு வாக்கியப் பகுதி -Complex Sentence)

* நீ எங்கே போகின்றாயோ,
Wherever you go,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)

* நான் உன்னைப் பின்தொடருவேன்.
I will follow you.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இலங்கையுடன் மோத இங்கிலாந்து தயார்

ENGLAND CRICKET



-என்டி ஃபிளவர்

அபுதாபியில் பாகிஸ்தான் அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரை 4-0 என்ற கணக்கில் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணி அதே உத்வேகத்துடன், இலங்கை அணியுடன் இலங்கையில் டெஸ்ட் தொடர் ஒன்றில் கலந்து கொள்ள ஆயத்த நிலையில் இருப்ப தாக இங்கிலாந்து அணியின் பயிற்றுனர் என்டி ஃபிளவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமது சொந்த நாட்டில் இலங்கை அணியை படுதோல்வி அடையச் செய்திருந்த இங்கிலாந்து அணி, டெஸ்ட் தரப் படுத்தல் பட்டியலில் முதலாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரில் தோல்வியை அடைந்த போதிலும் ஒருநாள் போட்டிகளில் மீண்டும் உரிய உத்வேகத்தை தமது அணி பெற்றதாகவும் என்டி ஃபிளவர் தெரிவித்துள்ளார்.எனினும், இலங்கை அணியுடனான போட்டி சமபலம் மிக்க போட்டியாகவே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொண்டிங் மீண்டும் டெஸ்ட் அணியில்...



சில வாரங்களுக்கு முன்னர் சர்வதேச கிரிக்கெட் களத்திலிருந்து ஓய்வுபெற்றிருந்த அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொன்டிங், இன்றைய நாட்களில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்ற பிராந்திய மட்டத்திலான போட்டித் தொடர்களில் பங்குபற்றி வருகின்றார்.

சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற ரையோபி (Ryobi) கிண்ணப் போட்டிகளில் 'தஸ்மேனியா' என்ற அணியில் இடம்பெற்ற பொன்டிங், இறுதிப்போட்டியில் தெற்கு அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 78 பந்துகளில் 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. எப்படியிருப்பினும், சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து பொன்டிங் ஓய்வு பெற்றுள்ளபோதிலும் மீண்டும் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியில் இடம்பெறுவதற்கான ஆயத்தநிலையில் இருப்பதாக தெரியவருகின்றது.

இறுதியாக இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் பொன்டிங் மொத்தமாக 577 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் ஓர் இரட்டைச் சதமும் ஒரு சதமும் உள்ளடங்குகின்றது.

# சச்சினின் நூறாவது சதம் கனவு நிறைவேறிவிட்டது



எப்போது நூறாவது சதம் அடிப்பாரென்று எதிர்பார்க்கப்பட்ட சச்சினின் சதம் கனவு நிறைவேறிவிட்டது. இலங்கையுடனான போட்டியில் அவர் பெற்ற நூறாவது சதம் பல சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது எனலாம்.

நீண்ட நாட்களாக டென்டுல்கர் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்காமல் இருந்து வந்தமையால் பல விமர்சனங்களுக்கு உள்ளாகி இருந்தார். இதன் காரணமாக டென்டுல்கர் தொடர்ந்து விளையாட வேண்டுமா? இல்லையா என்பது குறித்து கருத்துக் கணிப்பொன்று நடைபெற்று இருந்தது.

இந்த கருத்துக்கணிப்பின்படி, 57 சதவீதமானோர் டென்டுல்கர் ஓய்வு பெற வேண்டும் என்றும் 41 சதவீதமானோர் அவர் ஓய்வு பெறக் கூடாது என்றும் 2 சதவீதமானோர் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலர் டென்டுல்கர் ஓய்வு பெற வேண்டும் என்ற கருத்துக்களைத் தெரிவித்து வரும் நிலையிலேயே மக்கள் மத்தியில் இந்த கருத்துக்கணிப்பு நடைபெற்றிருந்தது.

எது எப்படி இருந்தபோதிலும் சச்சின் தற்போது நூறாவது சதத்தை எட்டிவிட்டார். ரசிகர்களின் கருத்துக்கள் இனி எவ்வாறு இருக்கும் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# லெவிக்கு ஐ.பி.எல். வாய்ப்பு



அண்மையில் நியூஸிலாந்தில் நிறைவுற்ற 'டுவென்டி டுவென்டி' போட்டிகளில் உலகிலேயே மிகவும் வேகமான சதத்தைப் பெற்றவர் என்ற பெருமையைப் பெற்று சாதனை படைத்த தென்னாபிரிக்காவின் ரிச்சர்ட் லெவி, ஏப்ரல் மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளார். சச்சின் டென்டுல்கர் தலைமையிலான 'மும்பாய் இந்தியன்' அணியிலேயே அவர் விளையாடவுள்ளார்.

தற்போதைக்கு சர்வதேச மட்ட 'டுவென்டி டுவென்டி' போட்டிகள் இரண்டில் மாத்திரமே கலந்துகொண்ட அனுபவத்தைக் கொண்டுள்ள லெவி, சர்வதேச மட்டத்தில் போதிய அனுபவத்தைக் கொண்டவராக இல்லாத போதிலும், வேகமான சதத்தைப் பெற்று சாதனை படைத்ததன் பிரதிபலனாகவே, அவருக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இவர், தென்னாபிரிக்க தேசிய அணியில் இடம்பெறுவதற்கு முன்னர் தென்னாபிரிக்காவின் 'கேப் கோப்ரா' என்ற பிராந்திய அணியின் சார்பில் விளையாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை றகர் அணிக்கு இங்கிலாந்து பயிற்றுனர்

*எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் மே 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 'ஏஷியன் ஃபைவ் நேஷன்' (Asian Five Nation) கிண்ண றக்பி போட்டியில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை றக்பி அணியின்* பயிற்றுனராக இங்கிலாந்தைச் சேர்ந்த ஃபில்கிரினின் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். ரூபா.20 மில்லியனுக்கு இரண்டு வருடகால ஒப்பந்த அடிப்படையில் இவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் இதற்கு முன்னர் இங்கிலாந்து கழக மட்ட அணியொன்றின் உதவிப் பயிற்றுனராக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது இலங்கை றக்பி அணியில் 40 பேரைக்கொண்ட உத்தேச அணி அமைக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களுக்குப் புதிய பயிற்றுனரின்கீழ் பயிற்றுவிப்புக்கள் நடைபெறவுள்ளன.






# டிராவிட்டின் இடம் யாருக்குக் கிடைக்கும்?



இந்திய அணியின் ராஹுல் டிராவிட் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுள்ள நிலையில் துடுப்பாட்ட வரிசையில் அவரது இடத்தைப் பிடிப்பது யார்? என்ற கேள்வி எழத் தொடங்கியுள்ளது.

இளம் வீரர்களான விராத் கொஹ்லி, புஜாரோ, ரோகித் சர்மா, ரஹானே, மனோரியா ஆகியோரில் ஒருவருக்கே டிராவிட்டின் இடம் கிடைக்கப்பெறும் என்று கணிக்கப்படுகின்றது. இவர்களில் கொஹ்லி மாத்திரமே ஏனையவர்களைவிட அனுபவம் கூடியவராக உள்ளார். இதன் காரணமாக, கொஹ்லிக்கே டிராவிட்டின் துடுப்பாட்ட இடம் வழங்கப்படக்கூடும். அப்படியாயின், தற்போது கொஹ்லி துடுப்பெடுத்தாடி வரும் ஏழாம் இடம் வெற்றிடமாகிவிடுவதால், அந்த இடத்தைப் பிடிப்பதில் ஏனைய நான்கு வீரர்களும் மு[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விண்வெளியில் குப்பைக் குவியல்




***நாம் வாழும் பூமியில் மனிதன் முகம் கொடுக்கும் மிக முக்கிய பிரச்சினையாக குப்பைக் கூலங்கள் காணப்படுகின்றன. புவியின் மேற்பரப்பில்தான் இவ்வாறு குப்பைக் குவியல் பிரச்சினை என்றால், தற்போது புவியைத்தாண்டி விண்வெளியிலும் குப்பைகள் குவியத் தொடங்கிவிட்டன.***

விண்வெளிக்கு அனுப்பிய ரொக்கெட்கள், விண்கலங்கள், ஆய்வுகளுக்காக நிலைநிறுத்தப்பட்ட செய்மதிகள், தொலைநோக்கி போன்றவை விண்வெளியில் விபத்துக்குள்ளானாலோ அல்லது தமது சேவைக்காலம் முடிவடைந்தபின்னர் செயல் இழந்தாலோ சிதைவடைந்த பாகங்களாக விண்வெளியில் மிதந்துகொண்டிருக்கின்றன. இவற்றையே 'விண்வெளிக் கழிவுகள்' அல்லது 'விண்வெளிக் குப்பைகள்' என்கின்றோம். விண்வெளிக் கழிவுகள் பெருமளவில் ஒன்றுசேர்வது புவியின் வளிமண்டலத்திற்கு மேலேயுள்ள கீழ் புவிச்சுற்றுப்பாதையிலாகும். இது புவியில் இருந்து 2000 கிலோ மீற்றர் உயரே அமைந்துள்ளது. பல்வேறு தேவைகளின் நிமித்தம் விண்ணில் ஏவப்படுகின்ற செய்மதிகளும் இச்சுற்றுப்பாதையிலேயே நிலைநிறுத்தப்படுகின்றன.






## விண்வெளியில் குப்பைகள் சேரும் விதம்

மனிதனால் பல்வேறு தேவைகளுக்காக, விண்வெளிக்கு அனுப்பப்பட்டு சேவைக் காலம் முடிந்தபின்னர் செயல் இழந்த அல்லது விண்ணுக்கு ஏவப்பட்டு, பல்வேறு கோளாறுகளின் காரணமாக,செயல் இழந்த செய்மதிகள் மற்றும் அவற்றின் சிதைவடைந்த பாகங்கள், விண்கலங்கள் மற்றும் அவற்றின் பாகங்கள், ரொக்கெட் ஏவுகையின்போது வெளியாகும் பொருட்கள் என்பன பிரதான விண்வெளிக் கழிவுகளாக விண்ணில் இருக்கின்றன. எனினும், இத்தகைய சில கழிவுப்பகுதிகள் பூமியின் மீது விழுந்தாலும் பெரும்பாலான கழிவுகள் சிதைவுகளாக விண்வெளியிலேயே தங்கிவிடுகின்றன. இத்தகைய கழிவுகளே புவியின் சுற்றுப்பாதையில் மிதந்தவண்ணம் பயணித்துக்கொண்டிருக்கின்றன.


## ஏற்படும் பாதிப்புக்கள்

விண்வெளியில் மிதந்துகொண்டிருக்கும் இத்தகைய விண்வெளிக் குப்பைகள் புவிச்சுற்றுப் பாதையில் மிக வேகமாகவும் சுதந்திரமாகவும் பயணித்துக்கொண்டிருப்பதால், ஏற்கனவே பல்வேறு தேவைகளின் நிமித்தம் புவிச்சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ள செய்மதிகளும் விண்வெளியில் பயணிக்கும் விண்கலங்களும் இந்தக் கழிவுகளால் பெரிதும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஏனெனில், இந்த விண்வெளிக் கழிவுகள் செயற்பாட்டில் இருக்கும் செய்மதிகள் மீதோ அல்லது விண்கலங்கள் மீதோ மோதினால், அவை பழுதடையலாம் அல்லது பாரிய விபத்துக்களைச் சந்திக்கலாம். சில சந்தர்ப்பங்களில் அவற்றின் செயல்பாடுகளுக்கும் இவற்றால் பாதிப்புகள் ஏற்படலாம். மேலும், இந்த விண்வெளிக் குப்பைகள் விண்வெளியிலுள்ள தொலைநோக்கிகளின் காட்சிப்பகுதியில் மோதுவதால், அவை பழுதடையலாம். அத்துடன், செய்மதிகளுக்கு சூரிய சக்தியைப் பெறுவதற்காகப் பொருத்தப்பட்டுள்ள சூரியகலங்களில் மோதுவதால் செய்மதிகள் சேதமடையலாம். இவை தவிர, விண்கலங்களின் ஜன்னல்களின்மீது மோதினால் ஜன்னல்கள் உடைய வாய்ப்புண்டு என்ற அச்சமும் இன்றளவில் நிலவுகின்றது.

## விண்வெளியில் சேர்ந்த முதலாவது குப்பை

1957 ஒக்டோபர் 4 ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதலாவது செய்மதியான 'ஸ்புட்னிக்-1' எனும் செய்மதியை விண்வெளிக்குக் எடுத்துச்சென்ற ரொக்கெட்டின் சில பகுதிகளே, விண்வெளியில் சேர்ந்த முதலாவது குப்பையாகக் கருதப்படுகின்றது. அன்றிலிருந்து இன்றுவரை விண்வெளியில் மில்லியன் கணக்கில் விண்வெளிக் குப்பைகள் சேர்ந்தவண்ணமுள்ளன.

## விண்வெளியின் பழமையான குப்பை




1958 இல் அமெரிக்காவினால் புவிச்சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தப்பட்ட அமெரிக்காவின் இரண்டாவது செய்மதியான 'வென்கார்ட் 1' எனும் செய்மதியின் சிதைவடைந்த பகுதிகள் இன்றும் விண்வெளியில் எஞ்சியுள்ளன.

## விண்வெளியில் விழுந்த கையுறை

1965 ஜூன் மாதம் அமெரிக்கர்களின் முதலாவது விண்வெளிப் பயணத்தில் கலந்துகொண்ட அமெரிக்க விண்வெளி வீரரான எட்வர்ட் வைட், விண்வெளியில் நடக்கும்போது அவரின் கையுறையொன்று கழன்று விழுந்தது. அது புவிச்சுற்றுப்பாதையில் வேகமாகப் பயணித்து விண்வெளிக் கழிவுகளுடன் இணைந்து கொண்டது. இதுவே விண்வெளிக் கழிவுகளுக்கிடையே உள்ள புடவையால் தயாரிக்கப்பட்ட முதலாவது பொருளாகும்.



## விண்வெளிக் குப்பையில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள்

- விண்கலம் மற்றும் செய்மதிகளில் பொருத்தப்பட்டுள்ள விசேட கருவிகள்மூலம் மோதும் தருவாயில் உள்ள விண்வெளிக் குப்பைகளை முன்கூட்டியே அறிந்து, அவை அப்பயணப் பாதையில் இருந்து விலகிச் செல்வதற்கான வழியை ஏற்படுத்தல்.
- 10 சென்ரிமீற்றரிலும் கூடிய விண்வெளிக் குப்பைகளின் பயணப்பாதையை அறிந்து கொண்டு, அந்தப் பயணப்பாதைக்கு மாற்றமாக செய்மதிகளினதும் விண்கலங்களினதும் பயணப் பாதையை அமைத்தல்.
- விண்கலங்களின் வெளிக்கட்டமைப்புகளையும் ஜன்னல்களையும் அதிக பலம் வாய்ந்ததாக அல்லது உறுதியாகத் தயாரித்தல். இதன்மூலம் விபத்துக்களைக் குறைக்கக்கூடியதாக இருக்கும். எனினும், இவற்றைத் தயாரிக்கும்போது, விண்வெளிப் பயணத்திற்கான செலவினங்கள் முன்னரைவிட அதிகரிக்கும்.



(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகிலேயே மிகப் பெரிய உயிரினமாகிய நீலத் திமிங்கிலம்


தற்போது உலகில் வாழும் உயிரினங்களில் மிகப் பெரியதாகக் கருதப்படுவது நீலத் திமிங்கிலமாகும். இதன் நீளம் ஏறக்குறைய 130 மீற்றர்; நிறை 125 தொன் முதல் 160 தொன் வரை இருக்கும். இத்திமிங்கிலத்தின் உடல் நீல நிறமாக இருப்பதாலேயே இப்பெயர் வந்ததாகக் கருதப்படுகிறது. அத்தோடு, இது ஒரு முலையூட்டியுமாகும். நீலத் திமிங்கிலத்தில் பெண் திமிங்கிலம் ஒரு முறையில் ஒரு குட்டியை மாத்திரமே ஈனும். அக்குட்டி நன்கு வளர்ச்சி அடையும்வரை தாய்த் திமிங்கிலமே அதனை நன்கு பேணி வளர்க்கும்.



நீலத் திமிங்கிலம் வேகமாக நீந்தக்கூடிய ஆற்றலையும் பெற்றது. சுவாசிப்பதற்காக அடிக்கடி நீரின் மேற்பரப்பிற்கு வந்து செல்லும். இது சுவாசிப்பதற்கு வசதியாக அதன் தலையின் மேற்பரப்பில் இரு துவாரங்கள் உள்ளன. பசியேற்படும் வேளையில் தனது பெரிய வாயை அகலத் திறந்தபடி நீரில் அங்கும் இங்கும் நீந்தியபடி பெருந்தொகையான கூனி இறால்களை உணவாக உட்கொள்ளும். ஒரேயடியாக விழுங்கி விடுமே தவிர், உணவைக் கடித்து உண்பதற்கு இதற்குப் பற்கள் இல்லை.


ஆழமான கடலில் வாழும் நீலத் திமிங்கிலம் ஒரு சாதுவான உயிரினமாகும். ஆழமற்ற கடலுக்கு வந்தால் அநேகமாக, உயிரிழப்பதற்கு வாய்ப்புண்டு. இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக 1894 இல் அம்பலாங்கொடை கரையோரத்தில் இறந்து கரையொதுங்கிய உயிரினமாகிய நீலத் திமிங்கிலத்தைக் குறிப்பிடலாம். இன்று அதன் எலும்பு கொழும்பு அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. உலகில் அருகி வரும் உயிரினங்களில் ஒன்றாக இது கருதப்படுவதால், இதனை வேட்டையாடுவது முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

(-அ)




# சாதனையாளர்: மருத்துவம்

ஜூலியஸ் வேக்னர் ஜாரெக் அவர்கள், 1857 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி ஐரோப்பாவின் ஒஸ்ட்ரியா நாட்டில் பிறந்தார். இவர் இளமையிலே கல்வியில் சிறப்புறத் தேர்ச்சி பெற்று மருத்துவத்திற்காக, பல்கலைக்கழகம் சென்றார். 1887 இல் மருத்துவப் பட்டம் பெற்ற ஜூலியஸ் அதற்கு முன்பே சில நோய்கள் பற்றியும் அதற்குரிய நிவாரணம் பற்றியும் தனது ஆய்வுகளை ஆரம்பித்திருந்தார். குறிப்பாக, தைரோய்ட் சம்பந்தப்பட்ட நோய்களும் அதற்கான நிவாரணம் பற்றியுமே அவரது ஆய்வும் இயக்கமும் இருந்தது.


(1857-1940)

தைரோய்ட் சுரப்பியின் விரிவாக்கத்தால் கழுத்தில் ஏற்படும் மாபெரும் வீக்கத்தை "Goitre' என அழைப்பர். இந்த தைரோய்ட் குறைப்பாட்டால் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் ஏற்படும் ஆபத்தான நோய்கள் குறித்த நிவாரணத்திற்காக, அயராது உழைத்தார் ஜூலியஸ். இந்த இரு நோய்களுக்கும் உள்ள மருத்துவ முறைகளையும் தாண்டி, புது மருத்துவ முறைகளைத் தந்து இந்த நோய்களைத் துரிதமாகக் குணமாக்க வழிவகை தரும் இலக்கில் தீவிரமாக இயங்கினார். மேலும், நரம்புமண்டலம் மற்றும் மூளை இவற்றின் கட்டுப்பாட்டில் உள்ள மனநோய்களுக்கு விதவிதமான புதுத்தீர்வுகள் தந்து, மனநோய் உள்ளவர்களுக்கான முறையான சிகிச்சை முறைகளை வரலாற்றில் பதியவும் முனைந்தார்.

அவரின் நல்லெண்ணத்தையும் அயராத பெரு முயற்சியையும் அர்ப்பணிப்பையும் கருத்திற்கொண்ட அக்கால ஒஸ்ட்ரிய அரசு, அவரை தலைநகர் வியன்னாவில் இயங்கி வந்த நரம்பு மற்றும் மனநோய் மருத்துவ மையத்தின் முதன்மை பேராசிரியராக நியமனம் செய்தது.

ஆரம்பத்தில் மூளைக் கோளாறுகள் சம்பந்தமான நோய்களைக் குணமாக்குவதிலேயே அவரது ஆய்வுகள் குவிந்திருந்தன. மனநோய் உட்பட, பல்வேறு மூளை சம்பந்தப்பட்ட எந்த நோயானாலும் உடலில் காய்ச்சலை ஏற்படுத்துவதன்மூலம் குணப்படுத்தி விடலாம் என்றதொரு அணுகுமுறை 1870 களில் மருத்துவர்களால் கையாளப்பட்டு வந்தது. இத்தகைய ஒரேயொரு பிரதான முறை மட்டும் இருந்தால் போதாது என உணர்ந்த ஜூலியஸ் மூளை மற்றும் மனம் சம்பந்தமான நோய்களுக்கு மாற்று மருத்துவ முறைகளைக் கண்டுபிடிக்க முயன்றார். மூளை குன்றிய காரணத்தால் அசாதாரணமாக நடந்துகொள்ளும் மனநோயாளருக்கு அதுவரை டொக்டர் ரொபர்ட் கோச் அறிவித்திருந்த ஓரிரு மருந்துகளைக் கொடுத்தார் ஜூலியஸ். 1887 இல் நிகழ்ந்த இச்சம்பவம் முக்கிய நிவாரணத்தை மனநோயாளர்களுக்கு ஏற்படுத்தவில்லை. இதனால், இந்த அணுகுமுறையை நீக்கிவிட்டு மாற்று வழிக்கான ஆய்வுகளில் முழுமூச்சாக இறங்கினார்.

## ஜூலியஸ் வேக்னர் ஜாரெக்

தனது நீண்ட ஆய்வின் வெற்றி 1917ஆம் ஆண்டு ஜூலியஸுக்குக் கிடைத்தது. மூளையையும் மைய நரம்பு மண்டலத்தையும் ஒரு சேரப் பாதித்து, நகரவிடாமலும் சிந்திக்கவும் சக்தியற்று, உடலில் உண்டாகும் வாதம் மிகவும் பயங்கரமானது என கண்டறிந்தார். மேலும், ஜூலியஸ் மலேரியாவை ஏற்படுத்தும் நோய்க் கிருமிகளை உடலுக்குள் செலுத்துவதால் வாதநோயை குணப்படுத்த முடியும் என்பதை உறுதியாக்கினார். மூளை சம்பந்தப்பட்ட வாதம் மற்றும் மனநோய்களுக்கு மலேரியாவை ஏற்படுத்தும் கிருமிகள் மருந்தாகின்றன என்று அற்புதமான மருத்துவ உண்மையைக் கண்டுபிடித்தமைக்காக, மருத்துவ சாதனையாளருக்கான நொபெல் பரிசினை 1927 ஆம் ஆண்டு பெற்ற ஜூலியஸ் வேக்னர் ஜாரெக், 1940 ஆம் ஆண்டு செப்டெம்பர் 27 ஆம் திகதி மறைந்தார்.

ஆர்.ஜே

# கிளிமீன்

இந்த மீன்களின் முன்பற்கள் அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்து ஒரு 'தட்டு' (Plate) போன்று காணப்படுவதால், இதன் வாய் பார்ப்பதற்குக் கிளியினது அலகு போன்று தோற்றமளிக்கும். அதனாலேயே, இது 'கிளிமீன்' என்று அழைக்கப்படுகின்றது.

இந்தக் கிளிமீன் குடும்பத்தில் 9 இனங்கள் உள்ளன. அத்துடன், 80 சிற்றினங்களும் இருக்கின்றன. இவை தம்முடைய பற்களால் சிறிய பவளப்பாறைகளைக் கடித்து, உடைத்து உண்கின்றன. பாறைகளை உண்ணும் இவற்றுக்கு அதிலுள்ள [illegible] மடைந்து ஏனைய கழிவுகள் மணலாக வெளியேற்றப்படுகின்றன. இந்த கிளிமீனினது,



தலையின்மேல் திமில் பகுதி தனியாகத் தெரிகின்றது. அத்துடன், இந்த கிளிமீன் 120 [illegible] வரை வளரக்கூடியது.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 4552
அஹமட் அக்ரம்,
பள்ளிவாசல் வீதி,
புத்தளம்.


அங்.இல: 4553
த.பாக்லே அஷ்விந்த்,
பாடசாலை வீதி,
கல்முனை- 02


அங்.இல: 4554
செ.கிறிற்றி சயனிக்கா,
வண்ணாகுளம்,
அடம்பன்,
மன்னார்.


அங்.இல: 4555
பாதிமா சபியா சிராஜ்,
தொட்டவத்தை,
பாணந்துறை.


அங்.இல: 4556
ஐ.நுஸ்ரா ஸீனத்,
வட்டபொல,
பாணந்துறை.


அங்.இல: 4557
க.கிதுசனா,
பிள்ளையார் கோவில் வீதி,
மட்டக்களப்பு.


அங்.இல: 4558
பாஸித்,
திபிரிவெல பண்டார,
கொஸ்வத்த.


அங்.இல: 4559
இ.விதுசன்,
பிரதான வீதி,
பண்டாரவளை.


அங்.இல: 4560
எஸ்.உஷானந்த்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 4561
ஜெ.லிங்கதாசன்,
அரசடி வீதி,
வட்டுக்கோட்டை.


அங்.இல: 4562
ச.முஹமட் சஸ்மின்,
பரிகாரிகண்டல்,
முருங்கன்.


அங்.இல: 4563
ஏ.பீ.ரொஷான்,
புருன் தெரு,
கிண்ணியா-05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கரியமில வாயுவை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?


இயற்கைப் படிமங்களாகிய நிலக்கீழ் எண்ணெய், நிலக்கரி, இயற்கை வாயு இவற்றை எரிக்கும்போதும் காடுகளை அழித்தல் மற்றும் வெறுமையான நிலங்களை விளைநிலங்களாக மாற்றும்போதும் அதிகளவில் கரியமில வாயு வளிமண்டலத்தில் சேர்கின்றது. அத்துடன், உயிரினங்கள் சுவாசிப்பதாலும் எரிமலைக் குமுறல்களாலும் கூட, காற்றில் கரியமில வாயு கலக்கின்றது. இவை இயற்கையாகவே நிகழ்கின்றன.

இத்தகைய வழிமுறைகளினால் காற்று மண்டலத்தில் கலக்கும் கரியமில வாயுவை மூன்று முறைகளில் சேமிக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். அதன்படி, முதலாவது முறையாக, படிம










எரிபொருட்களான நிலக்கீழ் எண்ணெய், நிலக்கரி போன்றவற்றை எரிக்கும் போது, வெளிப்படும் காபனைக் கைப்பற்றி சேமிக்க முடியும். இரண்டாவது முறை, எரிபொருள் வாயுவாக மாற்றப்படுகின்றது. இந்த வாயுவில் இருந்து காபனும் நீரும் பிரித்தெடுக்கப்பட்டு சேமிக்கப் படுகின்றன. மூன்றாவது முறையை 'Chemical Looping Combustion' என்கின்றனர். அதாவது, எரிபொருட்களுடன் உலோகங்களை வினைபுரியச்செய்து, காபன் டைஒக்சைட்டும் நீராவியும் பொதிந்திருக்கும் உலோகக் கட்டிகளாக மாற்றம் செய்யலாம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், அளவுக்கதிகமாக காபன் டைஒக்சைட் வளிமண்டலத்தில் கலப்பதை மனித நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினால் மட்டுமே பெருமளவில் குறைக்க முடியும் என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர் ஆய்வாளர்கள்.

# சுமை தாங்கும் கடல்

மனிதகுலத்தின் வாழ்வாதாரமே கடல்தான் என்பது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மை. புவிக்கோளத்தின் முக்கால்பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் கடல்தான் புவியின் வானிலையைத் தீர்மானிக்கின்றது. மனித செயற்பாடு




களினால் வளிமண்டலத்தில் வெளிவிடப்படும் காபன் டைஒக்சைட்டின் கால்பகுதியை கடல்நீர்தான் உறிஞ்சிக் கொள்கின்றது. இதனால், தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருப்பதால், கடல்நீரின் $Co_2$ உறிஞ்சு திறன் குறைந்து போயிருப்பதாக



ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டுகளில் 2.3 பில்லியன் தொன் காபன் டைஒக்சைட்டை கடல்நீர் உறிஞ்சிக்கொண்டுள்ளது. ஆனால், தற்போது கடல் நீரின் $Co_2$ உறிஞ்சுதிறன் 10 சதவீதம் குறைந்து போயிருப்பதாக ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ளனர்.

வளியில் காபன் டைஒக்சைட்டின் அளவு அதிகரிக்கும்போது, கடல் நீரின் அமிலத்தன்மையும் அதிகரிக்




புவி வெப்பமடைவது தடுக்கப்படுகின்றது.

எனினும், தற்போதைய மனித செயற்பாடுகளினால் காபன் டைஒக்சைட்டின் அளவு வளியில் அதிகரித்தே வருகின்றது. அந்தவகையில், ஒவ்வோர் ஆண்டிலும் காபன் டைஒக்சைட்டின் அளவு கின்றது. இதனால், கடல்நீரின் காபன் டைஒக்சைட் உறிஞ்சுதிறன் குறைகிறது என்கிறார் கொலம்பியா பல்கலைக்கழக விஞ்ஞானி சமர் கஹடிவாலா. வளிமண்டலத்தில் தொழிலகக் காபனின் அளவை 1975 ஆம் ஆண்டுமுதல் ஆய்வு செய்ததன் விளைவாகவே, இதனைக் கண்டறிந்துள்ளனர்.

# அகச்சிவப்புக் கதிர்களிலிருந்து மின்சாரம்!



சூரியனில் இருந்து வெளிப்படும் அகச்சிவப்புக் கதிர்களிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான புதிய ஆய்வு முறையொன்றை அமெரிக்காவின் ரைஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொண்டிருக்கின்றனர். அந்த ஆய்வாளர்களில் ஒருவரான, மின்னியல் மற்றும் கணினிப் பொறியியல் பேராசிரியர் நயோமி ஹலாஸ் என்பவர் கூறுகையில்; "தற்போது சூரிய சக்தியில், மின்சாரம் தயாரிப்பதற்கான சிலிக்கன் பெனல்களில் (Silicon panel) அகச்சிவப்புக் கதிர்களை கண்டறிந்து, ஈர்ப்பதற்கான வழியில்லை. எனவே, நாங்கள் அதில் நெனோ என்டனாக்களை செமிகண்டக்டருடன் (Semiconductor) இணைத்து அகச்சிவப்புக் கதிர்களிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இதனூடாக, அதிகத் திறன் வாய்ந்த சூரிய சக்தித் தகடு களை உருவாக்க முடியும்" என்கிறார்.







பூமிக்கு வரும் சூரிய சக்தியில் மூன்றில் ஒரு பங்கு அகச்சிவப்புக் கதிர்களே காணப்படுகின்றன. ஆனால், தற்போது பெரும்பாலான சூரிய சக்தித் தகடுகளில் பயன்படுத்தப்படும் பொருளான சிலிக்கனால் இத்தகைய அகச்சிவப்புக் கதிர்களின் சக்தியை ஈர்க்க முடிவதில்லை. அகச்சிவப்புக் கதிர்கள் போன்ற குறிப்பிட்ட அலை நீளத்துக்குக் குறைவாக உள்ள வெளிச்சக் கதிர்கள், மின்சக்தி உற்பத்திக்குப் பயன்படாமல் சாதாரண சூரியசக்தித் தகடுகளைக் கடந்து சென்றுவிடுகின்றன. அந்நிலையை எமது புதிய கண்டுபிடிப்பு மாற்றுகின்றது என்கிறார்கள் இந்த ஆராய்ச்சியாளர்கள். இது தொடர்பான ஆய்வுகள் மேலும் முனைப்புடன் நடந்து வருகின்றன.

# தாவரங்கள் பேசுகின்றன!

செடி, கொடிகள் போன்ற தாவரங்கள் பேசிக்கொள்கின்றன என்று இங்கிலாந்தில் உள்ள எக்ஸ்டெர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். முட்டைக்கோவா செடியானது, தனக்கு ஆபத்து வரும் என உணர்ந்தால், தனது இலைப்பகுதியில் சிறிய வெடிப்பை ஏற்படுத்துகின்றது. இதன்மூலம் ஒருவித வாயுவை வெளியேற்றி, சத்தம் ஒன்றை ஏற்படுத்தி, அருகில் உள்ள செடிகளை எச்சரிக்கின்றது. இதனை மிக நுட்பமான கெமரா ஒன்றின்மூலம் ஆய்வுசெய்து முதன்முறையாக விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினியில் மின்சாரத்தை கட்டுப்படுத்தும் Power USB

நீங்கள் கணினியைப் பயன்படுத்தும்போது, பல்வேறு விதமான கணினி இணைப்புப் பாகங்களைப் பயன்படுத்துவதுண்டு; இதேபோன்று, கணினிப் பாவிப்பில் மின்சார விரயத்தைக் கட்டுப்படுத்துவதற்கான இணைப்புப் பாகமொன்றும் இருந்தால் எப்படியிருக்கும்? ஆம் மிகவும் பயன்மிக்கதாகவே அது இருக்கும். இதனை சாத்தியப்படுத்துவதாயின், முதலில் நீங்கள் Power USB ஐ பயன்படுத்த வேண்டும். அதாவது, நீங்கள் பயன்படுத்துகின்ற மின்சாரப் பாவனையின் போது, தேவை அறிந்து அதற்கேற்ப மின்சாரத்தைக் கூட்டிக்கொடுப்பதா? குறைத்துக் கொடுப்பதா? என்பதை Power Basic மூலம் அளந்துகொள்ள முடியும்.

அதற்கேற்ப, அதன் தொழிற்பாடு அமையும். எனவே, கணினியானது, நீண்ட நேரத்திற்கு தொழிற்பட்டுக் கொண்டிருக்குமாயின், இந்த மின்சாரக் கட்டுப்பாட்டுப் பாகத்தில் உள்ள நான்கு முனைக் கூறுகளிலும் ஏனைய கணினி பொருத்துக்களும் பொருத்தப்பட்டிருந்தாலும் இதில் ஒரேயொரு முனைகூரு மட்டுமே எப்பொழுதும் மின்சாரத்தைப் பாய்ச்சிக்கொண்டிருக்கும். ஏனைய




மூன்று முனைகளும் தேவைப்பட்டால் மாத்திரமே மின்சாரத்தைப் பாய்ச்சும் விதமாக இந்த மின்சாரக் கட்டுப்பாட்டு மென்பொருள் அமைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

# விண்டோஸ் 8 அறிமுகம்




மைக்ரோசொஃப்ட் நிறுவனம் புதிய 'விண்டோஸ் 8' மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனை எவரும் தமது கணினியில் 'டவுன்லோட்' செய்துகொள்ள முடியும். எனினும், இது உறுதிப்படுத்தப்பட்டதாக கருதப்படமாட்டாது. ஏனெனில், இந்த மாதிரி Windows 8 ஐ பயன்படுத்துபவர்கள் அதிலுள்ள குறைநிறைகளை 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனத்திற்கு தெரியப்படுத்த முடியும். இவ்வாறு பாவனையாளர்களின் கருத்துக்கள் அறியப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்பட்ட பின்னரே, உறுதிசெய்யப்பட்டதாக Windows 8 உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

# 'ஃபேஸ்புக்' நிறுத்தப்படுமா?

ஃபேஸ்புக் (Face book) சேவையானது, நிறுத்தப்படவுள்ளதாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் உலகெங்கிலும் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்தது. 'ஃபேஸ்புக்' பாவனையாளர்களை இது அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஊடகங்களிலும் இது முக்கிய செய்தியாக அமைந்தது. எனினும், இந்த செய்தியில் உண்மைத்தன்மை கிடையாது என்று 'ஃபேஸ்புக்' இணைய சேவையின் ஒருங்கிணைப்பாளரான லெரி யூ தெரிவித்துள்ளார். தொடர்ந்து 'ஃபேஸ்புக்' தனது எதிர்காலத் திட்டங்களை முன்னெடுக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய வடிவத்தில் மின்னஞ்சல் சேவை




கூகுள் (Google) நிறுவனத்தைச் சேர்ந்த பிரதான செயற்பாட்டாளர்களான அவுஸ்திரேலிய பிரஜைகளான மூன்றுபேர் சில தினங்களுக்கு முன்னர் 'கூகுள்' நிறுவனத்தை விட்டு வெளியேறியிருந்த தகவல் பெரிதும் பேசப்பட்டது. Google+ மற்றும் Google wave ஆகியன தொடர்பாக, எழுந்துள்ள சில கருத்து பேதங்களின் காரணமாகவே, இவர்கள் நிறுவனத்தைவிட்டு வெளியேறியிருந்தனர். 'Sydney Morning' என்ற பத்திரிகையை அடியொட்டியே, இந்த தகவலை அறிய முடிந்தது. இருப்பினும், இவர்கள் தமது பணியை முன்னெடுத்தே வருகின்றனர். அதற்கமைய, இவர்களின் புதிய வடிவமைப் பான Fluent எனப்படும் மின்னஞ்சல் சேவையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது 'அப்பிள் நிறுவனத்தின் 'மெக்' கணினி யில் காணப்படுகின்ற 'Sparrow' விற்கு சமமானதாக காணப்படுகின்றது. இதிலுள்ள சிறப்பம்சம் என்னவென்றால், இதில் ஒரே வரியில் மீண்டும் பதிலை அனுப்பக்கூடிய வசதி உட்பட, தேடல் வசதி மற்றும் மின்னஞ்சல் சேவையை துரிதப்படுத்துவதற்கான நவீன தொழிநுட்ப செயற்பாடுகளும் உள்ளடங்குவதாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, மார்ச் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 21, 2012.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org